REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER.    T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னுகம், கர புரட்டாசி ௭ 23-9-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 12

JAFFNA COLLEGE LIBRARY
24 SEP 1951
VADDUKODDAI, CEYLON

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக் கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ தேவகுலத்துக்கே யன்றி மனிதகுலத்துக்கும் இனிமேல் இவ் வையகத்தில் மண்சுமக்கும் வேலை இல்லாமல் இருக்கத்தக்கதாகப் பல்வேறு யந்திரங்களை உற்பத்திசெய்து விட்டிருக்கிறார்கள்.

# கல்லோயாவில் ஓயாத வேலை

## புராணகாலப் பூதங்கள்போன்ற பிரமாண்டமான யந்திரங்கள்

"சுட்டிகுடம் வனைபவன் கொட்டியாரத்துக்குப் போனாலும், காலாட்டி வயிறுவளர்க்க" என்று ஒரு 'புது' மொழி வழங்கி வருகின்றது. இது ஏன் என்ன காரணத்தினால் வழங்கிவருகின்றது என்பதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுதெல்லாம் வேலையில்லை என்று சொல்லுகிறவர்களைப்பார்த்து, 'கல் ஓயாவுக்குப் போகலாமே' என்றுசொல்லுகிறார்கள்.

கல் ஓயாவுக்கு வேலை தேடிப் போகிறவர்கள் மாத்திரமல்ல, என்னைப்போற் கல் ஓயாவைப் பார்த்து வரப் போகிறவர்களும் ஆயிரக் கணக்கானவர்களாகும். வேலை தேடிப் போகிறவர்களும், பார்க்கப் போகிறவர்களும் கல் ஓயாப்புகையிரத ஸ்தானத்தில் இறங்கினவுடன் அங்கே நிற்பவர்கள் 'இது கல் ஓயா அன்று' என்று சொல்வார்கள். 'நீங்கள் என்ன சொல்லுகிறது, கல் ஓயா என்று தான் விளம்பரப்பலகை பெரிதாகப் போட்டிருக்கிறதே' என்று கேட்டால் 'விளம்பரப் பலகை இருப்பது சரிதான். ஆனால் கல் ஓயா இது வன்று' என்று மீண்டுஞ் சொல்வார்கள். இங்ஙனம் கல் ஓயாப் புகையிரத ஸ்தானத்தில் இறங்கித் தடுமாறினவர்கள் பலர்.

உண்மையில் கல் ஓயா என்று இன்று இலங்கை முழுவதும் (அமெரிக்காவிலுங் கூட) பேசப்படுகின்ற சொல் ஒரு இடத்தின் பெயரேயல்ல. இது ஒரு நதியின் பெயராகும். கல் ஓயாத் திட்டம் நடைபெறும் முக்கிய இடத்தின் பெயர் இங்கினியாகல என்பது. இதுவும் அவ்விடத்திலுள்ள மலையின் பெயராகும். எனினும் இங்கினியாகலை என்பதே அவ்விடத்திலுள்ள தபால் நிலையத்தின் பெயராகும்.

கல் ஓயா என்ற ஆறு, இலங்கை வாசிகளின் தவப் பயனால் ஒரு மலைத் தொடரூக் கூடாகப் பாய்கிறது. குதிரை லாட வடிவமான இங்கினியாக் கல மலைத்தொடர் அதன் மத்தியில் தொடர்பற்றுப் பெரியபள்ளமாக இயற்கையில் அமைந்துவிட்டது. மேற்கே பெரிய மலைத் தொடர்களிலி ருந்து ஊற்றெடுத்து வரும் கல் ஓயா ஆறு குதிரை லாட வடிவமான இங்கினியாக்கல மலைத்தொடருள் நுழைந்து, அதன் மத்தியில் தொடர்பற்று இருக்கும் பள்ளத்தாக்கின் வழியால் வெளிப்பட்டுச் செல்கிறது.

இங்கினியாகல மலைத் தொடர் தொடர்பற்று இருக்கும் பாகமாகிய கல் ஓயா ஆறு பாயும் இடைவெளி கிட்டத்தட்ட அரை மைலுக்குச் சிறிது அதிகமான தூரமாகும். இந்த இடைவெளியை அடைத்து, இங்கினியாகல மலைத் தொடரை இடையீடில்லாத ஒரு பூரண குதிரை லாட வடிவமான மலைத் தொடர் ஆக்கிக் கல் ஓயா என்ற ஆற்றை மேலே பாய விடாது தடுத்து, அதன் மூலம் ஒரு மகா பெரிய குளத்தைச் சிருஷ்டிப்பதே கல்ஓயா அணைக்கட்டு என்பதாகும்.

இவ்வணைக்கட்டின் நீளம் 3600 அடி. உயரம் 154 அடி. அணைக்கட்டின் மேற் தளத்தின் அகலம் 30 அடி. அடித் தளத்தின் அகலம் 900 அடி. அணைக்கட்டின் மேலும், அணைக்கட்டின் வெளிப்பக்கச் சுவரின் சரிவிற் சமதூரத்திலுள்ள இரு வரிசையிலும், கார் ஓடக்கூடிய அழகான வீதி அமைக்கப்பெற்று, இடைவெளிப்பாகங்கள் முழுவதும் புற்கற்றைகள் பதிக்கப்பட்டு விளங்குகின்றன.

அணைக் கட்டின் உட்பக்கம் ஒழுங்கற்ற கற்கள் போடப்பட்டிருக்கின்றன. அணைக் கட்டுக் கட்டப்பட வேண்டிய இடத்தைக் கற்பார்வரையுக் தோண்டி, கற்பார் தொடர்பாக இருக்கிறதா என்று இடையிடையே துளைத்துப் பார்த்து, அவைகளினூடேயும், கற்பார்களின் இடைவெளிகளிலும், தண்ணீர்விட்டு ஊதிப்பார்த்து, அவைகளைச் சீமேந்துக் கலவையால் நிரப்பி, அதன்மேல் அணைக் கட்டைக்கட்டியிருக்கிறார்கள்.

இந்த அணைக்கட்டு முழுவதும் மண்ணினாலேயே கட்டப்பட்டிருக்கிறது. அணைக்கட்டின் நடுப்பகுதி களிமண்ணினாலும், இடையில் ஒருபகுதி ஆற்று மணலினாலும், சாஸ்திர விதிப்படி கட்டப்பட்டிருக்கின்றது. ஆற்று மணல் ஏன் இடையில் போடப்படுகிறதென்று அங்கே ஒருவரை நான் கேட்டபொழுது, அவர் அதுதான் 'ஒற்றுத்தாள்' என்று கூறினர். எனக்கு அவர் சொன்னது ஒன்றுமே விழுவில்லை. அங்கே வேலை செய்பவர்களுடன் நாங்கள் அதிகம் பேசமுடியாது. அவர்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

● ● ●

கல் ஓயாத் திட்டம் இலங்கைக்கு ஒரு வரப்பிரசாதமென அரசாங்கம் பறைசாற்றுகின்றது. இது ஒரு மா பெரும் மோசடி யென எதிர்க்கட்சியினர் வன்மையாகக் கண்டிக்கின்றனர். யார் எதைக் கூறினும் கல் ஓயா இன்று உலகப் பிரசித்தமாகிவிட்ட தென்பது மட்டும் உண்மை. அங்கு நடைபெறும் அற்புதங்களையும் 'மோசடி'களையும் ஈழகேசரி வாசகர்கள் இக் கட்டுரை மூலம் விளக்கமாக அறிந்துகொள்ளலாம். இது போன்ற கட்டுரை இதுவரை இலங்கையிலே தமிழில் வெளிவரவில்லை யென்பது எமது அபிப்பிராயம். ப-ர்.

● ● ●



பிரதிநிதிகள் சபையில் திரு. ஸி. சுந்தரலிங்கம் அவர்கள் தமது அங்கத்தவர் பதவியை இழக்க வேண்டியதாயிற்று. தேசியக் கொடி சம்பந்தமாகச் சபை செய்த முடிவைஇவர் ஆட்சேபித்துக் கடந்த மூன்று மாத காலமாகச் சபைக் கூட்டங்களிற் பங்குபற்ருது இருந்துவிட்டார். இது காரணமாக அவர் தமது பதவியை இழக்க நேர்ந்தது.

# இளைஞர்களின் இதய ஒலி

## மட்டக்களப்பில் ஒரு புரட்சி!

கிழக்குத்தபால் : : நமது நிருபர்

மட்டக்களப்பு, 20-9-51

கிழக்கு மாகாண வானில் தவழும் முகிற் கூட்டம் ஒன்றில் மோதல் ஏற்பட்டு மின்னலுடன் முழக்கம் ஒலித்தது. புதுமைத் தமிழ் அமிழ்தினைச் சுவைத்துச் சுவைத்து மகிழும் இளம் உள்ளங்களிலும் வெற்றி முழக்கத்துடன் ஒலித்தது. பழையதிலுள்ள நலனேற்று, அல்லதைத் தள்ளி, காலத்திற்கேற்ப புத்தம்புதிதாய்த்தோன்றும் நலன்களை அச்சமின்றி முழுக்க முழுக்கத் தழுவும் புரட்சி உள்ளங்களிலும் வெற்றி முழக்கம் ஒலித்தது. பலப்பல பிரிவினை அற்று, ஒற்றுமை பரவிடப் பணியாற்றும் அன்புள்ளங்களிலும் வெற்றிமுழக்கம் ஒலித்தது. முழக்கம் கேட்டு நஞ்சுடை நாகம் நடுங்குகிறதல்லவா! அது போல் நஞ்சுடை நெஞ்சங்கள் நடுங்கவும் முழக்கம் ஒலிக்கத்தான் செய்தது. எங்கும் எதிரொலி முழங்கத் தோன்றியதுதான் 'முழக்கம்' என்னும் பத்திரிகை. இது ஒரு மாத வெளியீடு.

ஸ்ரீ சுத்தானந்த பாரதியின் ஆசி மொழிகளுடன் வெளியாகியிருக்கும் 'முழக்கம்' மட்டக்களப்பு இளைஞர்களின் ஆசியையும் பெற்றிருக்கிறது. சிறுவிறுப்பான தமிழில் குற்றங்குறைகளை அச்சமின்றிச் சுடச்சுடச் சுட்டிக்காட்டிப் பணியாற்ற 'முழக்கம்' புறப்பட்டிருக்கிறது. ஆசிரியர் பந்தியில் மாத்திரம் 'லை'க்குப்பதில் "லை" போடுவதாகிய புதிய எழுத்து மாற்றத்துடன் தோன்றியிருக்கும் 'முழக்கம்' தூய புரட்சி மனப்பான்மையுடன் துலங்குகிறது. இலங்கையில் இம் மாற்றத்தை அச்சிற் கொண்டுவந்த முதற் பெருமை இதற்கே உரியது என்று நம்பப்படுகிறது. மிகுந்த உற்சாகத்துடன் 'முழக்கம்' வெளியாகியுள்ளது.

இளைஞர்கட்கு, அவர்தம் வயதிற்கேற்ப உற்சாகம் வெகு தீவிரமாகவும், குற்றம் கண்டவிடத்து மிகு கோபம் வருவதும் இயற்கையே யல்லவா? இதையும் 'முழக்கம்' காண்பிக்கத்தான் செய்கிறது. இது "விபுலாநந்த மணி மண்டபம் எங்கே?", "குறைகுடம் தளம்புவது இயற்கைதானே" ஆகியவைகளி லிருந்து விளங்கும். அவைகளில் உண்மை இல்லாமலும் இல்லை. பின்னரில் வித்துவான் வேந்தனாரை திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள் தாக்கியமை

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

# கலைமகள் ஆசிரியர் விஜயம்

## யாழ்ப்பாணத்தில் இலக்கியவிரிவுரை

நமது நிருபர் கடிதம்

யாழ்ப்பாணம், 21-9-51

சமீபத்திற் கண்டியில் நடைபெற்ற தமிழ்விழாவிற் பங்குபற்றி விரிவுரை ஆற்றிய சென்னை கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் நாவலப்பிட்டி, அனுராதபுரம், பொலநறுவை, கொழும்பு ஆகியாம் இடங்களைத் தரிசித்துவிட்டு ஞாயிற்றுக்கிழமை (23-9-51) காலை விமானமார்க்கமாக யாழ்ப்பாணம்வந்து சேருகின்றார். அன்று பிற்பகல் 4-30க்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அகில இலங்கைக் காந்தீய சேவா சங்கத்தின் ஆதரவில் அரியதோர் இலக்கிய விரிவுரை ஆற்றுவார்கள். திரு. ச. பேரின்பநாயகம் அவர்கள் தலைமை வகிப்பார்கள். தமிழை முறையாகப் பயின்று சங்க இலக்கியங்களிற் போதிய ஆற்றல் பெற்றுள்ள வித்துவான் ஜகந்நாதய்யர் அவர்களின் விரிவுரையைக் கேட்கப் பலரும் ஆவலுடன் இருக்கின்றனர்.

### மரம் நாட்டல்

காந்திஜி பிறந்ததினத்தை இம் முறை ஒரு புதிய முறையில் கொண்டாடுவதென அகில இலங்கைக் காந்திய சேவா சங்கம் தீர்மானித்துள்ளது. அத்தினத்தில் மரங்கள் நடுவதென்றும் பனம் விதை நாட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, ஒக்டோபர் மாதம் 2-ந் திகதி யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் மகோற்சவம் ஏகதடபுடலாக நடைபெறுமெனத் தெரிகின்றது. பனை மரங்களைப் பாதுகாப்பதுடன் ஏனைய மரங்களையும் நடுவது அருமையான யோசனையாகும்.

### திருகோணமலை விக்கிரகங்கள்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் வேண்டுகோளுக்கு இசையத் திருகோணமலையிற் கண்டெடுக்கப்பட்ட விக்கிரங்கள் 23-9-51 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பெறும். அன்று பிற்பகல் 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவரும் பிறரும் இத் திருவுருவங்களை அரியாலைச் சந்தியில் வரவேற்பார்கள். கண்டி யாழ்ப்பாணம் வீதிவ

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

### திரு. எஸ். டி. சிவநாயகம்

சுதந்திரன் வார வெளியீட்டின் ஆசிரியர் திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்கள் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்தகாலை ஈழகேசரி காரியாலயத்தையும் சென்ற செவ்வாய்க்கிழமை தரிசித்துச் சென்றார்.

கசின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் வதந்தி

### கொண்டோடி

- வைரமேறிய மரங்களுட் கருங்காலியும் ஒன்ரும்.
- யப்பானியரும் வைரமேறிய சாதியினராம்.
- இலங்கை யப்பானுக்கு 20000 ரூபாய் பெறுமதியுள்ள யானைகள் ஏற்றுமதி செய்திருக்கின்றதாம்.
- யானைகள் அத்தனையுங் கருங்காலி யானைகளாம்.
- கருங்காலியின் நிறம் கருமையாம்.
- மர யானைகளைக் கண்டு மஞ்சள் நிற ஜாதியினர் ஆச்சரியப்பட மாட்டார்களாம்.
- நிதிமந்திரி ஜயவர்த்தனவை அமெரிக்கா ஆட்டிவைப்பதைக் கண்டு யப்பான் ஆச்சரியப்பட்டதாம்.
- பொம்மைகளும் ஆச்சரியப் பொருள்களாம்.
- மந்திரி ஜயவர்த்தனவும் ஒரு, கைப் பொம்மையாம்.
- அமெரிக்காவின் இரும்புக் கரங்களில் இலங்கை ஒரு றப்பர்ப் பொம்மையாம்.
- சீனத்துக்கு இலங்கை றப்பர் விற்றதை யறிந்து அமெரிக்கா இலங்கையைக் கண்டித்ததாம்.
- கண்டித் தமிழ் விழாவில் ஒரு சிலர் தமிழ் எழுத்தாளர்களைக் கண்டித்தனராம்.
- தமிழ் எழுத்தாளர்களை இரண்டாகப் பிரிக்கலாமாம்.
- ஆங்கிலம் தெரிந்த தமிழ் எழுத்தாளர் அதில் ஒரு பிரிவாம்.
- ஆங்கிலம் தெரியாதோர் மற்ருரு பிரிவாம்
- ஆங்கிலம் தெரிந்த தமிழ் எழுத்தாளர் பலருக்குச் 'சிறிது மண்டைக்கனம்' உண்டாம்.
- கம்பனும், புகழேந்தியும், வள்ளுவரும், இளங்கோவும் ஆங்கிலம் கற்கவில்லையாம்.
- இவர்களின் கற்பனு சக்தியைக் காசினி போற்றுகின்றதாம்.
- ஆங்கிலப் பித்தர்கள் இதனை அறியவேண்டுமாம்.
- தமிழ், சிங்கள, ஆங்கிலப் பத்திரிகை எழுத்தாளர்கள் கொழும்பிற் கூடினராம்.
- கூடினவர்கள் சங்கமும் அமைத்தனராம்.
- அதில் தமிழ்ப் பத்திரிகையாளர் கௌரவமான இடம் பெறவில்லையாம்.
- 'மாஜி' என்பதற்கு முன்னுள் என்று எழுதுவதே கௌரவத் தமிழாம்.
- 'ஓடர்', 'ஜெனரல்', 'குமாஸ்தா', 'மார்க்கெட்', 'ரேடியோ', 'சர்க்கார்' எல்லாம் தகடுதத்தத் தமிழாம்.
- இல்லை ஓய்! அது 'சறுக்கீஸ்' தமிழாம்.
- வெளிப்படையாகச் சொன்னுல் அது சறுக்கி விழும் பத்திரிகைத் தமிழாம்.

## இளைஞர்களின் இதய ஒலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக்கப்பட்டிருக்கிறது. வேந்தனர் தெவிட்டாத செந்தமிழிற் பேசினர் என்பதை விட செந்தமிழமுதம் அள்ளி அள்ளிச் சொரிந்தார் என்றுதான் கூறவேண்டும். அவருடைய சொற்பொழிவிலுள்ள கருத்து இளைஞர்தம் கருத்தையும், அளவற்ற சொல்லாட்சியுடைய அவர்தம் வீரத்தமிழ் எல்லோருடைய கருத்தையும் அள்ளிச் சென்றது உண்மை. புதிய புதிய கோணத்திலிருந்து ஆராய்ச்சி செய்து அவர் ஈந்த அறிவுக் களஞ்சியத்தைப் பற்றி இளைஞர் வியந்து கொண்டிருக்கும் பொழுது திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் கொஞ்சம் மிடுக்காகவே, நன்றி கூறுவதை விட்டு, அர்த்த மற்ற கண்டனம் செய்தார். இதுதான் இளைஞர் கொதித் தெழக் காரணமாயிற்று. அயலூர் அறிஞரைத் தாமே அழைத்து எதிர்பாராத விதமாக அவரைத் தாக்கியது பண்பாடுள்ள எந்த மட்டக்களப்பு வாசியின் உள்ளத்தையும் புண்படுத்தாது விடாது. கோபங்கொண்ட உள்ளத்தின் குமுறல்தான் 'குறைகுடம் தளம்புவது இயற்கைதானே' என்பது. இருந்தும் தமிழன் பண்பாடு உள்ளவன் அல்லவா? ஆத்திரத்தில் வரம்பு மீறுவதுபோற் காணப்படும் கடும் வார்த்தைகளை ஆளுவதற்கு இடங்கொடுக்கக்கூடாது. மக்களின் முழு ஆதரவும் கிடைக்கவேண்டுமானல் நடுநிலைமக்கள் ஆத்திரம் கொள்ளாவண்ணம் சொற்பிரயோகம் இருக்கவேண்டும். தனிப்பட்ட ஒருவரைப்பற்றித் தாக்குதலாகிய 'இவரைத் தெரியுமா?' என்பதும் 'முழக்க'த்தில் இடம் பெறக்கூடாது. பொது மக்களுக்குத் தீமை செய்யும் எவரையும் ஒழுங்காகக் கண்டிக்கும் உரிமை 'முழக்க'த்திற்கு என்றும் உண்டு. மக்கள் அனைவரும் கௌரவமாக 'முழக்க'த்தை வாசிப்பதற்கு அதன் ஆசிரியர் ஒழுங்கு செய்வாராக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. 7234

வட்டுக்கோட்டை கிழக்கு
1. நாகமணி சபாரத்தினம்
2. பெண் பொன்னம்மா

வழக்காளி

வட்டுக்கோட்டை கிழக்கு
சிதம்பரநாதர் மாரிமுத்து கைம் பெண் வள்ளியம்மை தானுகவும் காலம் சென்ற சிதம்பரநாதர் மாரிமுத்துவின் ஆஸ்திக்கு பிரதிகாரியஸ்தராகவும்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7234-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1951-ம் ஆண்டு ஒக்டோபர் (ஐப்பசி) மாதம் 13-ந்திகதி (13-10-51) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1300/-ம், இதில் ரூபாய் 1300/-க்கு 25-10-48 திகதி தொடக்கம் 26-4-51 திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 229-72½ சதம். இதில் ரூபா 1225-00 இறுபட்டது.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை "கொடுத்தாப்புலம்" நிலப்பரப்பு ஏழும் (7) வீடும் குழியும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு, ஒழுங்கை முகப்பும், முருகேச பிள்ளை கணபதிப்பிள்ளையின் பிள்ளைகளுக்குமுரிய ஆதனம். வடக்கு, நல்லசேகரம்பிள்ளை ஆறுமுகத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு, தில்லைநாதர் கைம் பெண் சின்னச்சிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு, சரவணமுத்து பெண் பொன்னுச்சிப் பிள்ளையின் ஆதனம், இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer.

தெல்லிப்பழை
7-9-51 [4405]


சகல பயிர்களுக்கு

CCC பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில் 40 வருடகால அனுபவத்தின் பயனுக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறேம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் CCC கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The Colombo Commercial Company, LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4893]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ "ஆங்கிலம் இலங்கையில் முன்னேற்றம் பெற்றால் அதனால் எமக்கு விளையும் தீமைகள் அளப்பில."

# கல்வியும் தாய்மொழியும்

வாய்ச்சொல் அளவில் எமது அரசாங்கம் தேசிய மொழிகளை ரொம்ப ஆதரிக்கின்றது. எமது பாடசாலைகளிலும் பல்கலைக் கழகத்திலும் இனிமேல் ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்பிப்பதைப் படிப்படியாகக் குறைத்து, தாய்மொழி மூலமே கற்பிக்கப்படுமென மந்திரிமாரும் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் பலரும் ஆசை வார்த்தைகள் கூறுகிறார்கள். இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளுமே அரசாங்க மொழிகளாய் அமையுமெனப் பல ஆண்டுகளாக வாய்ப்பறை சாற்றிவருகின்றனர். ஆனால் உண்மையில் நடப்பதென்ன?

வித்தியாதிபதி இவ்வருடம் ஏப்ரில் மாதத்தில் விடுத்த 16-ம் இலக்கச் சுற்று நிருபத்தின்படி, சகல பாடசாலைகளிலும், 3-ம் தரத்திலிருந்து ஆங்கிலம் கட்டாயமான இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படல் வேண்டும். இலங்கை சுதந்திரமற்றதாய், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்த காலத்திற்றானும், இவ்விதம் பலவந்தமாக ஆங்கிலம் எமது பாடசாலைகளிற் புகுத்தப்பட்டதெக்காலத்துமில்லை. இலங்கையை வசப்படுத்திய அன்னியர் எவரும் மக்களின் மொழிச் சுதந்திரத்தைப் பறிமுதலாக்கவில்லை. ஆனால், சுதந்திர இலங்கையில், ஆங்கில மொழி மீது மோகங்கொண்ட இப்போதைய அரசாங்கம், இவ்வன்னிய மொழியை இலங்கையின் அட்டதிக்கிலுமுள்ள கிராமங்கள்தோறும் பரப்ப முன்வருவது தாய்மொழிப் பற்றினாலென்க.

### உலக்கை தேய்ந்த கதை

ஐந்து ஆண்டுகட்குமுன், கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சைக்கு மாணவர்களைத் தாய்மொழிமூலம் தோற்றுவதற்கு ஆயத்தப்படுத்திய சுயபாஷா பாடசாலைகளின் தொகை இப்போது 75 சதவீதத்திற்குமேற் குறைந்துவிட்டது. சுயபாஷா கனிஷ்ட பாடசாலைகள், ஒரு சிலவற்றைத்தவிர, எல்லாம் இப்போது ஆரம்ப பாடசாலைகளாக மாறிவிட்டன. தாய்மொழிமூலம் மேல் வகுப்புகளிற் படித்த மாணவர் அனேகர் சற்றேறக்குறைய 30,000 பேர், இப்போது ஆங்கில பாடசாலைகளிற் சேர்ந்து ஆங்கிலமொழி மூலம் கற்க முயல்கின்றனர். தாய்மொழிக் கல்வி உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல அருகிவிட்டது. இவ்வித நிலைமைக்குக் காரணம் யாது? இலவசக் கல்வித்திட்டமல்ல. அரசாங்க மொழியாக ஆங்கிலம் இப்போது அமைவதும், இன்னும் நெடுங்காலம் ஆங்கிலத்தையே அரசாங்கமொழியாக வைத்திருக்க இப்போதைய அரசாங்கம் பலமாக அடிகோலுகிறதென்பதை மக்கள் நன்குணர்ந்திருப்பதுமே காரணம்.

ஆங்கிலத்திலே தராதரப் பத்திரமுடைய ஆசிரியர், அதே விதமான சுயபாஷா தராதரப் பத்திரமுடைய ஆசிரியரிலும் வேதனம் முதலிய விஷயங்களில் மிக அதிக சலுகைகளைப் பெறுகின்றனர். தாய்மொழியிற் பண்டிதர் வித்துவான் போன்ற உயர்ந்த பட்டங்களைப் பெற்ற ஆசிரியர்கள் வித்தியாபகுதியாரின் நோக்கில் தகைமையற்ற ஆசிரியராகக் காணப்பட்டு, ஆசிரியராதற்

○ வரன் ○

குத்தானும் உரித்துடையரல்லர். ஆனால் ஆங்கிலத்தில் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்த ஒரு மாணவன் உடனேயே இலங்கையிலுள்ள எப்பாடசாலையிலும் ஆசிரியனாதற்கு உரித்துடையனாகின்றான். சுயபாஷா பாடசாலைகளுக்கு இப்போதைய அரசாங்கம் சராசரிவரவு ஒன்றிற்கு ரூபா 2.50 வீதமே தாபரிப்புப் பணம் வழங்குகிறது. ஆங்கில பாடசாலைகளுக்குத் தாபரிப்புப் பணம் ரூபா 15 ஆகும். அதோடு, ஆங்கில பாடசாலைகள் ஒவ்வொரு மாணவனிடத்திருந்தும் மாதாமாதம் ஐந்து ரூபாவைப் பெறுதற்கு அரசாங்கம் சட்டமியற்றியிருக்கிறது. இவையெல்லாம், ஆங்கிலத்தைப் படிப்படியாக நீக்குதற்கும், தாய்மொழியை ஒரு கத்தன் மொழியாக உபயோகித்தற்கும் ஏற்ற நடைமுறைகளா என்பதைத் தேசமக்கள் சிந்திப்பார்களாக.

### குறையை நீக்குக

சென்றமாதம் இலங்கையின் பல்வேறு மாகாணங்களிலும் ஆரம்ப பாடசாலைகளில் ஆங்கிலத்தைத் திறம்பட எவ்விதம் புகுத்திப் படிப்பிக்கலாம் என்பதை ஆராயும் நோக்கமாக விடுமுறைகாலக் கழகங்கள் பல நிறுவப்பட்டு, ஆயிரக்கணக்கான ஆசிரியர் பயிற்சியைப் பெற்றனர். வித்தியாதிபதி ஒவ்வொரு மாகாணமாகச் சென்று, பாடசாலைகளைத் திருத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால், தாய்மொழிக்கல்வி விருத்திக்கு அனுசரணையானவை எதுவும் நடைபெறவில்லை. உயர் தரப் படிப்புக்கேற்ற பாடபுத்தகங்கள் தாய்மொழிகளில இல்லை என்று அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கிறதேயன்றி, இக் குறையை நீக்கும் முயற்சியிற் சிரத்தை காட்டவில்லை. தாய்மொழிகளிற் கலைச்சொல் ஆக்கவேலையில் அரசாங்கம் சென்ற பல வருடங்களாகச் செய்தவை என்ன?

இப்போதுள்ள வித்தியாதரிசிகளில் மிகப்பலர் ஆங்கிலத்தில் பெரிய பட்டதாரிகளாயிருக்கின்றனர். தாய்மொழியிலும் இவர்களுக்குப் போதிய அறிவு வேண்டும். அரசாங்கம் இன்னும் வித்தியாதரிசிகளைத் தெரிவு செய்யும்போது, தாய்மொழித் தகைமையைக் கவனியாது, ஆங்கிலப் பட்டங்களையே கவனிக்கிறது.

எமது கல்வியின் போக்கை நிர்மாணிப்பவர்களில் [illegible] மொழியாற்றலும் [illegible] னோர் இல்லை என்னலாம். கல்வித்திட்டத்தைக் கொண்டு நடாத்தும் பொறுப்புடைய அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர்களில் மிகச் சிலரே தாய்மொழி வல்லுநராயும் ஆர்வமுள்ளோராயும் இருக்கின்றனர் ஆங்கிலமொழிப்பயிற்சி என்னுஞ் சுவரினால் தம்மைப் புறம்புபடுத்தி, தாம் ஆளும்வர்க்கத்தைச் சேர்ந்தோர் என்று பெருமைகொண்டிருக்கும் குழுவினர், ஆங்கிலமொழி அரசாங்கமொழியாக என்றும் இருத்தலையே விரும்புவர்.

### இழுக்கான கூற்று

இதுவரை கூறப்பட்டதில் ஆங்கிலமொழிமீது துவேஷம் தொனிக்கிறதென்றோ, அல்லது அம்மொழி வர்த்தகத்திற்கும், பிறநாட்டுத் தொடர்புக்கும், இன்னும் சிலகாலம் இரசாயனம், பௌதிகம், பொறிநூல் முதலியன கற்றற்கும் அத்தியாவசியம் என்பதை உணராது கூறப்பட்டதென்றோ கொள்ளவேண்டியதில்லை. ஆங்கிலம் எத்தனையோ நன்மைகளை இதுவரைபயந்திருக்கிறதுண்மையே. ஆனால், இன்னும் இம்மொழி இலங்கையில் முக்கியத்துவம்பெற்றால் அதனால் எமக்கு விளையும் தீமைகள் அளப்பில. ஒரு சிலர், இன்றைய அரசியல் நிலையில், ஆங்கிலம் ஆதிக்கம்பெற்றிருப்பது விசேஷமாகத் தமிழருக்கே நன்மையைத் தரக்கூடியதென்று எம்மை ஏமாற்றுகின்றனர். ஆங்கிலம்போனால், சிங்களமே அரசாங்க மொழியாய் வரக்கூடுமென்னும் அச்சத்தால் உருவாகிய இக் கூற்று, தமிழரின் பண்பாட்டிற்கும் சுயமரியாதைக்கும் இழுக்காகுமாதலால், ஏற்புடைத்தன்று.

எமது இப்போதைய அரசாங்கம், இசையினாற் கட்டுண்ட நாகம்போல, ஆங்கில மொழியாலும், அம்மொழி பேசும் மக்களாலும் மயக்கப்பட்டு ஆடுகின்றது. சொந்தத் தாய்மொழியிலிருந்து அரும்பாது அன்னியமொழிப் பயிற்சியால் உருவாகிய மனப்பண்பாடுடைய எமது அரசாங்கத் தலைவர்கள் என்போர் தேசிய மொழிகளைக் குழி தோண்டிப் புதைத்து, அவ்விடத்தில் ஆங்கிலமொழி இலங்கையிற் சிரஞ்சீவியாகப் பல்லாண்டுகாலம் கொலுவீற்றிருந்து ஆட்சிபுரிதற்கேற்ற மாளிகையைத் திடமான தூண்களின் மீது கட்டியெழுப்ப முன்வருவது நாட்டின் துர்ப்பாக்கியமேயாகும்.

---

**யாழ்ப்பாணம்**
**ஆரிய திராவிட**
**பாஷாபிவிருத்திச் சங்கம்**
**பரீட்சைகள் — 1951**

இச் சங்கத்தின் செயலாளர் திரு. அ. சரவணமுத்து அவர்கள் எழுதுவதாவது:— இவ்வாண்டுப் பரீட்சைகள் இம் மாசம் 27-ந் திகதி வியாழக்கிழமை தொடக்கி மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணம் அரசினர் சிங்களப் பாடசாலையிலும், மட்டக்களப்பு அரசினர் ஆங்கிலக் கல்லூரியிலும் நடைபெறும்.

பண்டித பரீட்சைக்கு 28 பேரும், பாலபண்டித பரீட்சைக்கு 24 பேரும், பிரவேச பரீட்சைக்கு 44 பேரும் தோற்றுகின்றார்கள். பழைய பாடவிதானத்தின்படி இது கடைசிப் பரீட்சையாகும். 1952-ம் ஆண்டு [illegible] படியே [illegible] பரீட்சைகள் நடைபெறும்.

---

# வேரின் வேதாந்தம்

★

[வித்துவான் எஸ். உமைதாணுபிள்ளை]

நேற்றுப் பிறந்த ரோஜாவே!
நேர்மை யிழந்து பேசாதே
வேற்றான் போல நினைக்கின்றாய்
வேடம் மாறி இளிக்கின்றாய்
காற்று மொளியுங் காணாமல்
கன்னங் கரிய நிறத்தோடு
சேற்றிற் புதைந்து வாழுமென்னைச்
சேர்ந்து கூடிச் சிரிக்கின்றாய். 1

காற்றி லுதிரும் சருகெல்லாம்
கட்டி யணைக்கும் என்நண்பர்
ஊற்றின் கண்கள் உதிர்புழுதி
உரித்தா யுதவும் உயிர்த்தோழர்
சேற்றில் வாழும் புழுவெல்லாம்
சேவைக் குரிய என்தோழர்
போற்றி யவரை நேசிப்பேன்
புவன மறியப் போற்றிடுவேன். 2

தந்தை யாக நினைத்தென்னைத்
தரையில் நடக்க மனமிசையார்
சந்த மில்லா உடலோடு
தவழ்ந்து திரியுங் குழவிகளைச்
சிந்தை கவரும் உருவமில்லாச்
சிறிய ரென்றே பழிக்கின்றாய்
எந்த நாளும் எளியவரை
எள்ளி யிகழும் இவ்வுலகம். 3

மின்னும் முகத்தின் மின்னொளியை
விரும்பிப் பெற்ற விதமென்ன
உன்னற் கரிய உன்னிறத்தை
உரித்தா யெங்கே நீபெற்றாய்?
தன்னே ரில்லா உன்னழகின்
சரித்திர மெல்லா மறிவாயோ?
என்னைப் போல உன்குட்டை
யாவ ரறிவார் எடுத்துரைப்பார்? 4

உன்றன் காதில் ஒளிவிட்டு
ஒளிரும் வைரத் தொங்கட்டான்
என்றும் எவரும் உனைநோக்க
இணையில் எழிலை உனக்களிக்கும்
நின்ற நிலையில் உலகெல்லாம்
நித்த முன்னை மோகிக்கும்
வென்றி நாட்டு மச்செருக்கால்
வெருட்டி நோக்கிப் பழித்தனையோ. 5

—தொடரும்


புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930

# ஈழகேசரி

சுன்னாகம், கர௵ புரட். ௭
— காந்தி ஆண்டு 82 —
பேசுந் தந்தி இல. 805

## கமக்காரருக்கு உதவி

மழையின்மை காரணமாகச் சென்ற மூன்று நான்கு வருடங்களாக வட இலங்கையில் வாழும் கமக்காரர் அடைந்துள்ள கஷ்டங்களும் நஷ்டங்களும் இம்மட்டன்று. சென்ற வருடம் கமக்காரர் விதை நெல்லினைத் தானும் பெற்றிலர் இவர்கள் துயர்களும் பரிதாப நிலைகளும் பன் முறை எடுத்துக் காட்டப்பட்டும் அரசினர் இவர்கட்கு எவ்வித பெரிய உதவியும் செய்ததாகக் காணேம். தென்னிலங்கைக் கமக்காரருக்கு இவ்வித ஆபத்துநேரின் அரசினர் வாளாவிருப்பாரா? கேட்க முன்னரே தேடி விரைந்து முன்வந்து அவர்கட்குச் சகல உதவிகளையும் மிக்க ஆர்வத்துடன் செய்வாரல்லவா?

நெற் செய்கையில் ஈடுபட்ட ஒவ்வொரு கமக்காரரும் சென்ற மூன்று வருடங்களாக அடைந்துள்ள நட்டத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பின் அது மிகப் பெரிதாக விருக்குமென்பதிற் சந்தேகமில்லை. கஷ்டமுறும் இக் கமக்காரருக்கு அரசினர் உதவி வழங்காது விடுவது எப்படி முறையாகும்? வேறிடங்களில் கமக்காரர் விதை நெல், உரம், முற்பணம் என்பன தாராளமாக அரசினரிடமிருந்து பெறுகின்றனரே. யாழ்ப்பாணத்திலுள்ள ஏழைக் கமக்காரருக்கும் அரசினர் விதை நெல்லாவது கொடுத்துதவக் கூடாதா? இலவசமாகக் கொடுக்காவிடினும் குறைந்த விலைக்காவது கொடுக்கலாமே. இந்த அரிய ஆபத்தான சந்தர்ப்பத்திலன்றே அரசினரின் உதவி ஏழைக்கமக்காரருக்கு வேண்டும். தலைமைக்காரர், பகுதிக் காரியாதிகாரிகள், மாகாண அதிகாரிகள் இவ் விஷயத்தை அறியாதிருக்கின்றனரா? பின் இவ்விஷயத்தில் ஏன் தாமதமும் பராமுகமுங் காட்ட வேண்டுமோ?

உணவுப் பொருள் விருத்தியில் அக்கறை மிகுதியுங் காட்டிவரும் அரசினர், வட இலங்கைக் கமக்காரர் இவ்விதமாக மிக்க அலங்கோல நிலையை அடைய, வாளா விருப்பது மிக அற்புதமாகின்றதே. விதை நெல் பெற்றுக் கொடுப்பதுடன் நில்லாது புதிய முறையில் நெற்பயிர் செய்யும் உபாயங்களையும் கமக்காரருக்குக் கற்றுக் கொடுப்பது அரசினர் கடமையாகும். நெற்பயிர் நன்கு உண்டாவதற்கு ஏற்ற பசளை சரிக்கட்டும் முறைகள் பல வெவ்வேறிடங்களில் அனுட்டிக்கப்படுகின்றன. நிலத்தை அதிக செலவின்றி நன்கு உழுது பண்படுத்தக் கூடிய முறைகளும் வேறிடங்களில மிக்க இலாபத்துடன கையாளப்படுகின்றன, இவைகளையெல்லாம அரசினா வட இலங்கைக் கமக்காரருக்குக் கற்றுக் கொடுப்பின் எவ்வளவு நன்மையாகும். ஆகவே, அரசினர் இவ்விஷயத்தில் மிக்க ஊக்கங் காட்டி ஏற்பட்ட குறைகளால் மேன் மேலும் துயரெய்தாவண்ணம் நடபடிக்கைகளைக் கையாள்வது அவசியமாகும்.

### மிகவும் ஏற்றதே

சமயபாடம் வித்தியாசாலைகளில் இதுவரையும் கற்பிக்கப்பட்டுவந்ததாயினும் அதைக் குறித்து விசேஷ அக்கறையை எவரும் மேற்கொண்டாரில்லை. இப்போது எல்லா வித்தியாசாலைகளிலும் சமயக்கல்வி கட்டாயம் கற்பிக்கப்படவேண்டுமென்றும் அதற்கேற்ற ஒழுங்குகள் வித்தியாசாலை அதிகாரிகள் செய்யவேண்டுமென்றும் அரசினர் உத்தரவொன்று சமீபத்தில் எழுந்துளது. கல்விக்கும் சமயத்துக்கும் ஒருவித சம்பந்தமுங் கிடையாதென்று கூறிச் சமயக் கல்வியை அசட்டைசெய்து வந்தமையாற்றான் மனிதனது வாழ்க்கை பொதுவாக எல்லா நாடுகளிலும் மிக்க கேவல நிலையை அடைந்துளது. சமயத்தோடு சம்பந்தப்படாத கல்வியாற் சிறிதும் பயனில்லை என்பதை முன்னரே பன்முறை மிகத்திடமாக மகாத்மா காந்தியடிகள் விளக்கியுள்ளார்கள். இதுவரையும் நாம் வேற்றரசினரின் கீழ் இருந்தமையால் எமது சமயக் கல்வி மாத்திரமல்ல, சமயமும், நாகரிகமும், பழக்கவழக்கங்களும், உடை முதலியவைகளும் போலியான கோலங்களைக் கொள்வனவாயின. இனி, சுதந்திரத்தைப் பெற்ற நம் நாட்டில் இந்தப் பெரிய ஊழலகட்கு இடமில்லை. மாணவர்களின் ஒழுக்கம் நன்கு திறம்படவேண்டின், சாதாரண கல்வியுடன் சமயக் கல்வியும் நன்கு உறுதிப்பட வேண்டும். வித்தியாசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் இவ்விஷயத்தில் மிக்க ஆர்வத்துடன் உழைப்பது அவசியமாகும்.

### சுருட்டுத் தொழில்

யாழ்ப்பாணத்திற் சுருட்டுத் தொழிலானது சீர்பெற்று நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார். அரசாங்கத்தின் தலையீடின்றிச் சுருட்டுத் தொழிலை முதலாளிமாரும் தொழிலாளர்களும் ஒற்றுமையுடன் நடாத்த வேண்டுமென்பதைச் சிலவாரங்களுக்கு முன்னர் ஈழகேசரியில் வெளியான கட்டுரையொன்று செவ்வனே எடுத்துக் காட்டிற்று. அதில் வெளியான யோசனைகளை நீராவியடியிலுள்ள சுருட்டுத் தொழில் முதலாளி ஒருவர் ஏற்றுச் சங்கமும் அமைத்துள்ளார். அவருடைய முன் மாதிரியைப் பின்பற்றி ஏனையோரும் சங்கங்கள் அமைத்தல் அவசியமாகும். அரசாங்கம் சுருட்டுத் தொழில் சம்பந்தமான விசாரணையை நடாத்த விருப்பதால் இத்தகைய சங்கங்கள் பேருதவியாக இருக்குமென்பது எமது அபிப்பிராயமாகும்.

### கலைமகள் ஆசிரியர்
#### நீர்வேலியில் விரிவுரை

சென்னை கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் 23-9-51 ஞாயிற்றுக் கிழமை இரவு 7-30க்கு நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய வாசிகசாலையைத் திறந்து வைப்பார்கள். இந் நிலையத்தில் ஈழகேசரி ஆசிரியர் திரு. இராஜ. அரியரத்தினம் அவர்கள் தலைமையில் ஆசிரியர் ஜகந்நாதன் அவர்கள் 'முருக வழிபாடும் கலாசாரமும்' என்னும் பொருள்பற்றி விரிவுரை ஆற்றுவார்கள்.

### கொழும்புத் தமிழ்ச சங்கம்

இச் சங்கத்தின் ஆதரவிற் பாரதி விழா சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை உணவுப் பொருட்பகுதித் தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளையவர்களின் தலைமையிற் கொண்டாடப்பட்டது. திருமதி பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவம் பி. ஏ. அவர்களும், திருகோணமலை திரு. கோ. இராஜகோபால் அவர்களும் அரிய விரிவுரைகள் ஆற்றினர்.

## வீதி ஓரத்தில் பாட்டீகாரி

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்யும் அறிஞர்களின் தொகை இந் நாட்களில் அதிகரித்து வருகின்றது. இங்கு ஏற்படுத்தப்படுங் கூட்டங்களில் இப் பெரியார்கள் பேசும்போது நாவலர் பெருமானைப்பற்றி நாலு வார்த்தைகளேனும் பேசியே விடுகின்றனர்.

கண்டியில் நடைபெற்ற பாரதிவிழாவிற் கலைமகள் ஆசிரியர் அவர்கள் பேசும்போது நாவலர்பெருமானை ஒருபெண்ணுக்கு ஒப்பிட்டிருந்தார். பெண்ணினுல் அவள்பிறந்த வீட்டுக்கே நன்மை உண்டாகின்றதாம். அவள் பிறந்த அப் பண்பாட்டைப் புக்ககத்திற் காட்டுவதுபோல நாவலர் பெருமானும் அவ்வாறு காட்டியிருப்பதாக அவர் கூறினர்.

❀

### எதிர்ப்பில்லை

தமிழ்நாட்டிலிருந்து வரும் பத்திரிகை ஆசிரியர்களையும் அறிஞர்களையும் இங்குள்ளவர்கள் வரவேற்று உபசரிப்பதைக் கண்டித்துச் சில மாதகாலமாகக் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ளவர்களில் ஒரு சிலர் விஷமப்பிரசாரம் செய்து வந்தனர். ஒரு சில பத்திரிகைகள்கூட இதில் மூனைந்து நின்றன. ஆனல் கண்டித் தமிழ் விழாவின்போது எவ்வித எதிர்ப்பும் சிருஷ்டிக்கப்படவில்லை. சகலரும் மலைநாட்டு விழாவை ஆதரித்துத் தூப தீபங் காட்டியதுடன் வாழ்த்துச்செய்திகளும் அனுப்பி வைத்தனர். ஆமாம், இவையெல்லாம் பட்டுத்தெளிய வேண்டிய காரியங்கள்.

❀

### காக்கை கரையும்!

தோல்வி மனப்பான்மை ஒருவருக்கு ஏற்படுமானல் அவருக்கு மீட்சியே கிடையாது. உலகமே அவருக்கு இருண்டுவிடும். உலகமொழிகளைத் தான் அவர் கரைத்துக் குடித்தாலும் நயவஞ்சகருடைய சகவாசத்தினுல் அவர் காக்கைபோற் கரையவே தொடங்கி விடுவார்.

❀

### தெருவிலே தமிழர்!

கோண்டாவிற் கூட்டமொன்றிற் கோப்பாய்ப் பிரதிநிதி பேசும்போது கூட்டத்துக்குச் சென்றவர்கள் சிலர் தெருவில் நிற்பதைக் கண்டார். தமிழ் மக்கள் தெருவில் நிற்பதைத்தாம் விரும்பவில்லையென்றும் தமிழர்களும் சிங்களரைப் போலக் கௌரவமாக வாழவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். ஒரு சில தமிழரின் நடத்தையைக்கண்டு சந்தி தெருவெல்லாம் சிரிக்கும் போது அவர்கள் தெருவில் நின்றுல் என்ன? மாடிவீட்டிற் குந்திக்கொண்டிருந்தாலென்ன? எல்லாம் ஒன்றுதான்!

## ஆக்கவேலையும் எழுத்தாளரும்
### ஆசிரியர் ஹரன் தலைமையில் விழா

அமரகவி பாரதியாரின் அருளினுல் ஆரம்பிக்கப்படும் எழுத்தாளர் சங்கம் வளர்ச்சியுற்றுச் சிறந்த முறையிற் பணி புரியவேண்டுமென வீரகேசரி ஆசிரியர் திரு. கே. பி ஹரன் அவர்கள் கண்டி நகர மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்க ஆரம்பவிழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார். தமிழ் உலகிற்கு அறிஞர் வ. ரா. அவர்கள் ஆற்றிய பெரும் பணிகளைக் குறிப்பிட்ட திரு. ஹரன் அவர்கள் எழுத்தாளர்கள் சமரச மனப்பான்மையுடன் பணியாற்றவேண்டுமெனத் தெரிவித்தார். அத்துடன் ஆபாசப் பிரசுரங்களைத் தமிழர்கள் ஆதரிக்கக் கூடாதெனவும் வேண்டிக் கொண்டார்.

திரு கே. கணேஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப்பேசுகையிற் குறிப்பிட்டதாவது: இதற்குமுன்னர் எத்தனையோ எழுத்தாளர் சங்கங்கள் இலங்கையிலே தோன்றி மறைந்துவிட்டன. அக்கதி இச் சங்கத்திற்கு ஏற்படாதென்பதே எமது நம்பிக்கை. ஆபாசமான தமிழ்ப் பிரசுரங்கள் ஏராளமாக இந்தியாவிலிருந்து இங்கு வந்து குவிவது வருத்தத்துக்குரியது. உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் எனப்பாரதியார் கூறியிருப்பது போலத் தமிழ் எழுத்தாளர்கள் உள்ளத்தூய்மை கொண்டு சிரஞ்சீவித் தன்மை பொருந்திய இலக்கியங்களை இருக்கவேண்டும். இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் ஆபாசப் பிரசுரங்களைத் தடைசெய்யுமாறு இலங்கை அரசாங்கத்தை நாம் வற்புறுத்தவேண்டும்.

சாகிராக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர் ஜனுப் எஸ். எம். கமால்தீன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது: தமிழ்ப்பத்திரிகைகளில் இன்று 100க்குத் 90 சதவிகிதம் கதைகளாகவேயிருக்கின்றது. கதைகள் மட்டும் போதா; வாழ்க்கையின் சகல துறைகளுக்கும் அவசியமான விஷயங்களும் பிரசுரமாவது அவசியமாகும்.

வித்தியாதரிசி நவாலியூர் திரு. சோ நடராஜா அவர்கள் பேசும்போது சென்னையிலுள்ள தமிழ் எழுத்தாளர் சங்கத்தைப் பின்பற்றி இலங்கைத்தமிழ் எழுத்தாளர் சங்கமும் உழைக்க வேண்டுமெனக் கூறினர்.

கொழும்பு வானெலி தமிழ்ப் பகுதி அதிகாரி திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் பேசும்போது தமிழ் எழுத்தாளர்கள் காலத்துக்குத் தக்கவாறு தங்கள் கருத்துக்களையும் வாசகர்களின் தேவைகளையும் அனுசரித்து நடக்க வேண்டுமென்றூர்.

கலைமகள் ஆசிரியர் திரு. ஜகந்நாதன் அவர்கள் இலக்கியத்தைப்பற்றியும் தமிழ்ப் பண்பாட்டைப்பற்றியும் இனிமையாகப்பேசினர்.

எழுத்தாளர் சங்க ஆரம்ப விழாவுக்கு முன்னர் பாரதி விழாவும் மத்தியமாகாணத் தமிழ்ச்சங்கஆரம்ப விழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றன. இலங்கை இந்தியக் கலாசாரத் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கு இவ் விழாக்கள் பேருதவி புரிந்துவருகின்றன.

## வானிசை

☆ வசந்தன் ☆

### கொழும்பு வானெலி

பாடகர்களிற் பெரும்பாலோர் கீர்த்தனங்களில் ஒன்றுக்குமேற்பட்ட சரணங்களிருந்தால் அவற்றை முற்றுகப் பாடாமல் ஒரு சரணத்தையே பாடுவது இப்போது வழக்கமாகிவருகிறது. வானெலியைப் பொறுத்தமட்டில் இந்த வழக்கம் ஓரளவுக்கு மன்னிக்கத்தக்கது. ஆனல் மேடைக்கச்சேரி செய்பவர்கள் கீர்த்தனங்களை முற்றுகப் பாடவேண்டும். இதிலே தவறுவாராயின் இரசிகர்கள் அதனை வற்புறுத்திப் பாடகர்களை ஒழுங்கான முறையிற் பாடச்செய்தல் வேண்டும். அரை குறையாகப் பாடல்களைப் பாடும் புதிய வழக்கம் அடியோடுநீங்கவேண்டும். கேட்போர் அனைவருக்கும் பாடல்கள் முற்றுகத் தெரிந்திருக்குமோ வென்பதை இங்கு குறிப்பிடவில்லை.

திருமதி கமலா ரத்னம் சென்ற 11-ந் திகதி 'சகலகலா வாணியே' என்ற கேதார இராகப் பாடலைச் சொற்றெளிவுடனும் இராகக் களையுடனும் பாடினர். இப்பாடலின் சரணங்களையும் இவர் பாடியமை பாராட்டுதற் குரியது. சுத்த தன்யாசி இராகப் பாட்டு நன்ருயிருக்கவில்லை. சங்கதிகள் சுருதி சுத்தமில்லாமலிருந்தன. 'காரணம் கேட்டுவாடி' என்ற பாடலை இவர் சண்முகப்பிரியா இராகத்திற் சாபு தாளத்திற் பாடியது பொருத்தமாயில்லை. இதே பாடலைப் பூர்விகல்யாணி இராகத்தில் ஆதிதாளத்திற் பாடிவருகிறூர்கள்.

**திரு. எஸ். குழந்தைவேலு**

வீணை — இவர் வாசிப்பில் விசேஷமாய் ஒன்றும் சொல்வதற்கில்லை. சாசாங்கி இராக சங்கதிகளை மாறிமாறி வாசித்தாரே அன்றிச் சாசாங்கிஇராகத்தின் களையை நன்கு வெளிக்காட்டவில்லை.

**திரு. பி. எஸ். நமசிவாயம்**

இவர் பாடிய சங்கராபரண இராகத்தையும் அதிற் பாடிய 'எதுடநிலசிதே' என்ற பாடலையும் கேட்டோம். சங்கராபரண இராகத்தை நன்ருகப் பாட முயற்சித்தார். தாரஸ்தாயியிற் சாரீரம் சுத்தமாகப் பேசவில்லை. சில வேளைகளில் ஒரே மூச்சிற் பல சங்கதிகளைப் போட முயற்சிக்கும்பொழுது மூச்சுப் போதாமற் சங்கதிகள் தெளிவில்லாமலும் சுஸ்தானங்கள் குறைந்தும் பேசின. இவர் முன்னுக்கு வரக்கூடியவர்.

**திரு. கே. குமாரசுவாமி**

வயலின் — இவர் வயலின் நன்ருக வாசிக்க முயற்சித்தார். இன்னும் மிடுக்காகவாசிக்கவேண்டும். மோகனம் நன்ருயிருந்தது.

**பிரார்த்தனை**

வெறும் அலறலுக்கும் அபஸ்வரங்களுக்கும் சன்மானம் வழங்கப்படுகிறதென்றுல் அது கொழும்பு வானெலி நடத்தும் பக்திப் பாடல் நிகழ்ச்சிகளுக்கும் வாத்தியக் கோஷ்டியுடன் பாட்டு நிகழ்ச்சிகளுக்குமே உரியது. இவ்வித நிகழ்ச்சிகள் நிறுத்தப்படல் வேண்டும். இம்மாதம 14-ந் திகதி காலை ஒருவர் பக்திப் பாடல்கள் பாடினர். சொற்களைத் தெளிவாக உச்சரித்தாரே அன்றிப் பொருளை உணர்ந்து பாவத்துடன் பாடவில்லை. பக்தி பரவசம் வானெலி நிலையத்திலே வருமோ என்பது சந்தேகம். கோயில்களிற் கூட்டுப் பிரார்த்தனைகள் நடக்கின்றன. இதிற் பங்குபற்றுவோர் உண்மையிலே உணர்ச்சியுடன் பாடுகிறூர்கள். கேட்பவர்களுக்கும் அது ஓரளவு பயன்தருகிறது. இவ்வித நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்வது பொருந்தும். அதை விடுத்துப் பக்திப் பாடல்கள

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் சபையில் மாற்றம்

## பிரதமர் நேரு பெற்ற வெற்றி

### இந்தியா

காங்கிரஸ் நிர்வாகத்திற் புதிய மாற்றங்களும் திருத்தங்களும் அவசியமென்பதற்காகவே பிரதமர் நேரு காரிய நிர்வாகசபையினின்று விலகினர். ஸ்தாபனத்தைத் தூய்மைப் படுத்துவதற்கே நிர்வாகசபையை மாற்றி அமைக்கவேண்டுமென்றனர். இதன் காரணமாகக் காங்கிரஸிற் பெரிய பிளவு ஏற்படப் போகின்றதெனஅநேகர் அபிப்பிராயப்பட்டனர். காங்கிரஸ் வீழ்ச்சியை அடையுமெனப் பலர் எதிர்பார்த்தனர். ஆனால் அப்படியொன்றும் நடைபெருது போயிற்று. காங்கிரஸ் தலைமை நேருஜிக்கே அளிக்கப்பட்டது. இப்போது புதிய காரிய நிர்வாகசபையும் நியமிக்கப்பட்டாயிற்று. அதில் முன்னர் காங்கிரஸ் தலைவராகவிருந்த இரு. தாண்டன் அவர்களும் இடம் பெறுகின்றனர். எவ்வித பிணக்கும், வேற்றுமையுமின்றிக் காங்கிரஸ் திருத்தியமைக்கப்பட்டமை நேருஜிக்கே பெருவெற்றியாகும்.

### வகுப்பு வாதிகள்

காங்கிரஸில் வகுப்புவாதம் புக விடாது தடுப்பதே தமது பிரதம வேலை என்றுர் பிரதமர் நேரு. இந்தியாவின் அரசாங்கம் இந்து அரசாங்கமாக வேண்டுமென்பதை நேருஜி சிறிதும் அங்கீகரிக்கவில்லை. பாகிஸ்தான் அரசாங்கம் சமயத்தை ஆதாரமாகக் கொண்டு நடத்தப்படுவது போல் இந்தியாவும் இருக்க வேண்டுமென்று இந்துமகா சபையினரும் வேறு சிலரும் நெருங்கி முயல்வதைப் பிரதமர் நேரு ஏற்கவில்லை. இந்தியாவிற் பல சமயவாதிகள் இருக்கின்றனர். எல்லாச் சமயத்தினரும் எவ்வித வித்தியாசமுமின்றிச் சமமாக நடத்தப்படவேண்டுமென்பதே பிரதமரின் கோட்பாடு. இந்தியாவின் பெருமையும் பெலமும் இதிலேயே தங்கியுள்ளது. எனவே நேருஜி இந்தியாவில் வகுப்புவாதம் தலையெடுக்காது பாதுகாக்கவேண்டுமென்பதில் மிக்க கண்ணும் கருத்துமாகவுளர்.

### பழையபடி பாகிஸ்தான்

இந்தியாவினை எப்போதும் குற்றத்துள் கொண்டுவந்து பழிசுமத்துவதே பாகிஸ்தானின் பிரதம நோக்கம். ஐ. நா. சங்கப் பிரதியாகச் சென்ற இரண்டு மாதங்களாகக் காஷ்மீர் விஷயங்களை நோக்கி ஆராய்ந்த கிரஹம் அவர்கள் இப்போது ஐரோப்பா சென்றுவிட்டார். ஜெனீவாவிலிருந்து தமது அறிக்கையைத் தயாரித்து ஐ நா. சங்கத்துக்கு அனுப்புவார். அவ்வறிக்கை எப்படியாகுமென எவரும் அறியார். ஆனல் பாகிஸ்தான் அரசாங்கமும் பத்திரிகைகளும் இப்போதுதானே கூச்சலிடத் தொடங்கிவிட்டன. கிரஹம் அவர்கள் சிபார்சுகளைப் பாகிஸ்தான் எவ்வித நிபந்தனையுமின்றி ஏற்றதாகவும் ஆனல் இந்தியா ஏற்க மறுத்துவிட்டதாகவும் புகார்கள் கிளப்பப்படுகின்றன.

### ஆந்திர மாகாணம்

ஆந்திர மாகாணம் புதிதாக வகுக்கப்பட வேண்டுமெனச் சென்ற முப்பது ஆண்டுகளாக வாதிக்கப்படுகின்றது. இப்போது பழைய காங்கிரஸ் வாதியும் 75 வயது சென்றவரும், முதியோருமாகிய சீதாராமசாஸ்திரியார் இம் மாகாணம் வகுக்கப்பட வேண்டுமெனக் கூறி உண்ணுவிரதம் ஆரம்பித்து முப்பது நாட்கள் ஆகின்றன. இவர் மாத்திரமல்ல; இவருடன் துணையாக வேறு பலரும் இவ்விரதத்தில் சேர்ந்து கொண்டனர்.

## கல்லோயாவில் ஓயாத வேலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அருமையாகச் சொன்ன மறுமொழியை, விளங்கவில்லை என்று திருப்பிக் கேட்கத் துணிவில்லாமல் நான் திருதிருவென்று விழித்தேன்! 'நீங்கள் காகிதம் எழுதி, மையொற்றுந் தாள் இல்லாவிட்டால் மணல் போட்டு ஒட்டுவதில்லையோ; அதுபோலத்தான்' என்று எனது வேருெரு அன்பர் எனக்கு விளங்கப்படுத்தினர். அணைக்கட்டிற்கும் காகிதம் எழுதுவதற்கும் என்ன சம்பந்தம் என்று அறியாது மேலும் விழித்தேன். முதல் சொன்ன அன்பரே, 'அணைக்கட்டிலே தண்ணீர்படுங்காலத்தில் ஆங்காங்கே ஊறக்கூடிய அற்ப ஈரத்தை இந்த ஆற்றுமண் தன்னகத்தே இழுத்து வைத்துக்கொள்ளும். அதனுல் அதை ஒற்றுத்தாள்' என்று கூறினேன் என்றுர்.

அணைக்கட்டில் போடப்படும் மண்ணில் ஒரு சிறு கல்லாவது, சிறு வேர்களாவது கிடையாது. மணல் கொண்டு வந்து பாவும்பொழுது, ஆங்காங்கேயுள்ள வேர்களை எடுத்து அருகேயுள்ள தொட்டியில் எரியும் நெருப்பில் போட்டுக்கொண்டேயிருக்கிறுர்கள்.

மணலை வெட்டுவதும், ஏற்றுவதும், கொண்டுவந்து கொட்டுவதும், பாவுவதும், தண்ணீர் தெளிப்பதும், உரம்போடுவதும் எல்லாம் யந்திரங்களேயாகும். 'யூக்கிளிட்' என்னும் கொம்பனியார் சிவபெருமான்மேல் இரக்கங்கொண்டு — அவர் பிட்டுக்கு மண் சுமந்த சரித்திரத்தைக் கேள்வியுற்று — தேவ குலத்துக்கே யன்றி மனிதகுலத்துக்கும் இனிமேல் இவ் வையகத்தில் மண் சுமக்கும் வேலை இல்லாமல் இருக்கத்தக்கதாகப் பல்வேறு யந்திரங்களை உற்பத்தி செய்துவிட்டிருக்கிறுர்கள். அவைகள் எல்லாவற்றையும் 'யூக்கிளிட்' என்று கூறுவார்கள்.

பார்வைக்கு 'லொறி' போலத் தோன்றுகின்றது. ஒரு 'யூக்கிளிட்' மண்ணை ஏற்றிக் கொண்டுவரும். அணைக்கட்டின்மேலே குறித்த இடத்தில் வந்ததும் அங்கே நிற்கும் ஒருவர் சைகைகாட்ட, வயிறு வெடித்துக் கொட்டுவதுபோல, அடிப்பக்கம் இரண்டாகப்பிளந்து, மண் கீழே தொடராகவிழும். இத்தனைக்கும் அந்த லொறி 'யூக்கிளிட்' ஒருஇடத்தில் தாமதித்து நில்லாது. அது கொட்டிவிட்டுப்போக இன்னெரு 'யூக்கிளிட்' வந்து அதைப் பரவிக் கொண்டு போகும். இன்னெரு யந்திரம் மழைபோலத் தண்ணீரைத் தெளித்துக் கொண்டு செல்லும். பெரிய உருளையின்மேல், பெரிய முட்கள் பதிக்கப்பட்ட பெரிய யந்திரம் உரம் போட்டுக் கொண்டு செல்லும். ஒரு யந்திரம் குடைசாய்ந்தால் இன்னெரு யந்திரம்வந்து அதை இடித்துச் சரிப்படுத்தும். ஒரு யந்திரமேனும் கணப்பொழுதாகிலும் தாமதித்து நில்லாது இரவும் பகலும் 24 மணித்தியாலமும் எல்லா யந்திரங்களும் வேலை செய்து கொண்டே நிற்கும். மனிதர்கள் எட்டு மணித்தியாலத்திற்கு ஒரு முறை மாறிக் கொள்வார்கள். இப்படி ஓயாமல் உழைக்கும் இந்த 'யூக்

(தொடர்ச்சி 5-ம் பத்தி பார்க்க)

## வானிசை

4-ம் பக்கத் தொடர்ச்சி

நிகழ்ச்சிகள் என்று ஹார்மோனிய சுருதியையும் வைத்துக்கொண்டு பண்களையும் இசைக்கத் தெரியாமல் திண்டாடினுல் அதனுல் ஒருவருக்கும் பிரயோசனமில்லை.

### திரு. ஆர். முத்துசுவாமி

வயலின் – திரு. முத்துச் சுவாமியின் வாசிப்பிலே திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இனிமையும் குழைவும் கற்பனையும் விவகாரமும் பெருகியிருக்கின்றன. இது பாராட்டுதற்குரியது. இவருடைய சங்கராபரண இராகம் தனி அழகுடன் விளங்கிற்று. கற்பனு சுரகங்கள் வெகு ரசமாயிருந்தன. சமீபத்தில் கேட்ட கச்சேரிகளில் இவருடைய கச்சேரி முதலிடம் பெறுகிறது. மிருதங்கம் வாசித்தவர் நன்றுக வாசித்த போதிலும் சில இடங்களில் வயலின் நாதத்தை மறைத்தார். வானெலிச் சிறுவாய்க்குச் சற்றுத் தூரத்தில் இருந்து வாசிக்க ஒழுங்கு செய்தல் வேண்டும்.

### திருமதி லீலா துரைசிங்கம்

வாத்தியக்கோஷ்டியுடன் திருமதி லீலா துரைசிங்கம் பாடினுர், சிம்மேந்திர மத்தியம இராகத்தில் 'வங்கள நாம சங்கீத' என்ற பாடலைப் பாடினுர். சில சங்கதிகள் தெளிவற்றிருந்தன. 'ஸ்வராக' என்ற சங்கராபரண இராகக்ருதி நன்றுயமைந்திருந்தது. இது பாடப்படுமுன் வயலின் வாசித்தவர் இராகத்தை எடுப்பாக வாசிக்கவில்லை. காபி இராகப் பாடலும் நன்றுகப் பாடப்பட்டது. இராகமாலிகையிற் பாடிய பாடல் சோபிக்கவில்லை. பியாக் இராகத்தை வயலினில் வாசித்தவர் கச்சிதமாக வாசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. வாத்தியக் கோஷ்டி என்ற முறையில் இந்நிகழ்ச்சி நன்றுயமையவில்லை. இதற்குக் காரணங்கள்:—

- வாத்தியக் கோஷ்டியுடன் ஏற்கனவே பாடப்பட்ட இரண்டு பாடல்கள் இந் நிகழ்ச்சியில் இடம்பெற்றன. புதிய பாடல்களோ புதிய இராகங்களோ காணப்படவில்லை.
- வாத்தியகாரர் பாடல்களை நன்கு பயிற்சி செய்யவில்லை. பாடகி பாடிய சங்கதிகளை வாத்தியம் வாசித்தவர்கள் சிலர் கவனிக்கவில்லை. இவ்வித வாத்தியகாரர்கள் எவ்விதம் பாடல்களை அணிசெய்வது?

## ஆசிரியர் மாரிசாமி

சென்னைத் தினசரி காரியாலயத்திலிருந்து வெளியாகும் காண்டீபம் பத்திரிகையின் ஆசிரியர் திரு. எஸ். எஸ். மாரிசாமி அவர்கள் அமெரிக்க அரசினரின் அதிதியாக அமெரிக்காவில் 3 மாதகாலம் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

அமெரிக்க அரசாங்கமே திரு. மாரிசாமி அவர்களை அழைத்துள்ளது.

இவர் கடந்த 12 வருடங்களாகப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ளார். 15 புத்தகங்கள் எழுதியுள்ளார். இம் மாதம் 22-ந் உ இவர் சென்னையிலிருந்து கிளம்பி 27-ந் உ நியூயோக் சென்றடைவார்.


— விளம்பரம் —

கொழும்பு அல்லாத பிற இடங்களில் வசிப்பவர்கள், செலவும் சிரமமுமின்றி, எவ்வின 'மோட்டார் கார்'கள், 'வான்', 'லொறி' முதலியன விலைக்கு வாங்கவோ விற்கவோ விரும்பினுல் தபால் பெட்டி 931, கொழும்பு என்ற விலாசத்துக்கு எழுதவும்.

Post Box 931, COLOMBO.

[4408]





## கண்டியிற் பாரதி விழா

21-9-51

கண்டியிற் சென்ற வாரம் நடைபெற்ற பாரதியார் விழாவில் தலைமை வகிப்பதற்காகக் கலைமகள் ஆசிரியர் வித்வான் கி. வா. ஜகந்நாதன் விமானமார்க்கமாகக் கொழும்பு வந்து சேர்ந்தபொழுது அவரை ஏற்கனவே அறிந்திருந்த கொழும்பு நண்பர்கள் அவருக்குப் பூமாலை சூட்டி வரவேற்றனர்.

கொழும்பில் இறங்கியதும் தமிழ் நாட்டில் நிற்பது போலவே இருக்கிறதெனக் குறிப்பிட்டார் அவர் கண்டியில் நடைபெற்ற பாரதியார் விழாவிலும் எழுத்தாளர் கூட்டத்திலும் பேசிய பின்னர் பல இடங்களைச் சுற்றிப்பார்த்துவிட்டுக் கதிர்காம யாத்திரையில் ஈடுபடுவார். சனிக்கிழமை (22-9-51) மாலை கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்திற் பேசுவார். பின்னர் யாழ்ப்பாணம் சென்று அங்கும் ஒரு சொற்பொழிவு நிகழ்த்திய பின்னர் சென்னைக்குப் பிரயாணமாவார். கண்டியில் எழுத்தாளர் கூட்டத்தில் உணர்ச்சி ததும்பப் பேசினுர், இலங்கையிலே எழுத்தாளருக்கு விமோசனமே கிடையாது; எழுத்தாளருக்கு என்ன மதிப்பு இருக்கிறது; எழுத்தாளர்களாகச் சீவனம் நடத்தவும் இலங்கையில் மார்க்கம் இல்லை; சிறந்த எழுத்தாளர்களாக இருந்தாலும் எத்தனை பத்திரிகைகள் பணம் கொடுத்து அவர்கள் கட்டுரைகளைப் பிரசுரிக்கின்றன. காசுபெருமல் எழுதிக் கொடுக்கும் கட்டுரைகளே பெரும்பாலும் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. ஆனல் நேர்மையான எழுத்தாளருக்கு, செங்கோலைக் கையில் ஏந்திய எழுத்தாளனுக்கு, இலங்கையில் ஆதரவு கிடையாது. ஆயிரக் கணக்காக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பத்திரிகைகளிலும் இலங்கை எழுத்தாளருக்கு இடமில்லை. கல்கி, ஆனந்தவிகடன், கலைமகள் போன்ற பத்திரிகைகளில் இலங்கை எழுத்தாளர் எத்தனைபேர் எழுதிப் பணம் பெறுகின்றனர். இங்குள்ளவர்களுக்கு எழுதத் தெரியாதென்பது இந்தியப் பத்திரிகைகளின் அபிப்பிராயமா? எழுத்தாளர்களின் பொருளாதாரக் கஷ்டம் தீர வழி தேடவேண்டும். எழுத்தாளர் சங்கம் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நடுநின்று ஆராயவேண்டும். அன்றேல் குறிப்பிட்ட சில சுயநலப் புலிகள் வாய்ப்பட்ட சங்கமாக இது மாறிவிடக்கூடும்.

### கிராமத் தலைமைக்காரர்

உள்நாட்டு மந்திரியின் அழைப்பில் கிராமத்தலைமைக்காரர் கொழும்புக்கு வந்து சேர்ந்தனர். ஆனுலிவர்கள் பிரயாணஞ் செய்வதற்கு அனுப்பப்பட்டமூன்றும்வகுப்பு 'உவாறென்றுகளை' இவர்களில் அநேகர் வந்தனத்துடன் திருப்பியனுப்பிவிட்டனர். தங்கள் சொந்தச் செலவில்வந்துசேர்ந்தனர். பிரதம தேசாதிபதியும் இவர்களுடைய திறமையைப் பாராட்டிப் பேசினர். மாகாண ஆட்சியின் முதுகெலும்புத் தலைமைக்காரர்தான் என்று பிரதம தேசாதிபதி குறிப்பிட்டார். இவர்களைக் கிராமத்து அதிகாரிகள் எனலாம். ஆனல் இவர்களுக்கு நூதனசாலை, மிருகக்காட்சிச்சாலை முதலியனவற்றைக் காட்டவும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. இவர்கள் இதுவரை கொழும்பைக்காணவில்லை என்ற அர்த்தமா? அடுத்த தேர்தலுக்குமுன் இவர்களுக்கும் சாப்பாடு போட்டு உஷார்ப்படுத்திவிடும் திட்டம் என்றுகூட இங்குள்ள சிலர் பேசிக்கொள்கின்றனர்.

### காசு அனுப்பலாம்

செலாவணிக் கட்டுப்பாட்டில் இவ்வாரம் முதல் பல புதிய மாற்றங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன. இப்பொழுது 'கூப்பனை'க் காட்டி 250 ரூபாய் அனுப்பலாமாம். கட்டுப்பாடு தளர்ந்தால் பணம் அனுப்புகிறவர்களும் அக்கறையாக அனுப்ப வழிவகைகள் தேடமாட்டார்கள். கட்டுப்பாடு இருக்கும்போது அதை எப்படியாவது சுற்றி வளைத்து மீறவே மனம் ஏவும். 15 ரூபாவுக்கு மேற்படாமல் எந்தச் சமயத்திலும் 'மணியோடர்' மூலம் பணம் அனுப்பலாமாம்.

## திருமணம்

விஞயகமூர்த்தி - வியாகேஸ்வரி

இணுவில் பிரபல வைத்தியர் திரு. செல்லப்பா அவர்களின் புத்திரன் திரு. விஞயகமூர்த்தி அவர்களுக்கும், காலஞ்சென்ற காரைவாய் தெற்கு திரு. சிவஞானசுந்தரம் அவர்களின்புதல்வி திருமதி வியாகேஸ்வரிக்கும் சென்ற 8-9-51-ல் மணமகள் இல்லத்தில் விவாகம் சிறப்பாக நடந்தேறியது. மணமக்கள் சகல சம்பத்தும் பெற்று நீடு வாழ்வார்களாக.

## கல் ஓயாவில் ஓயாத வேலை

(2.ம் பத்தித் தொடர்ச்சி)

கிளிட்' யந்திரங்களைப் பண்டைக் காலத்தில் 'பூதங்கள் என்று சொல்வார்கள். ஆகையால் பூதங்களைப்பற்றி உங்களுக்கு அதிகம் நான் விளங்கப்படுத்த வேண்டியதில்லை.

—(தொடரும்)


# வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

(1933-ம் ஆண்டில் நிறுவப்பட்டது)

அகால மரணமடையும் ஆசிரியரின் குடும்பத்துக்கும், இளைப்பாறும் ஆசிரியருக்கும் உதவி செய்யும் நோக்கமுடைய

ஒரு ஸ்தாபனம்

30 வயதுக்குட்பட்ட சுயபாஷா ஆங்கில ஆசிரியர் அனைவரும் அங்கத்தவராகச் சேரலாம்.

1-1-51-ல் அங்கத்தவர் தொகை 637.

1-1-51-ல் கையிருப்பு ரூபா 1,32,603-37.

1950-ல் இளைப்பாறிய எட்டு ஆசிரியருக்குச் சகாயமாகவும் கட்டணப் பணமாகவும் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 11,035-39

அங்கத்தவராகச் சேராதவர்

இப்பொழுதே சேரவும்!


சங்க விதிகள் மனுப்பத்திரம் முதலிய விபரங்களுக்கு பின்வரும் விலாசத்துக்கு எழுதவும்.

காரியதரிசி,

வட மாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்,

[4407] 8, பிறவுன் றேட், : : யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




**விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை**: ஆசிரியர்: திரு பொ. திருகூடசுந்தரம், எம். ஏ., பி. எல். பிரசுரம்: காந்தி நிலையம், தியாகராய நகர், சென்னை. விலை ரூபா 3-4-0

ஏற்கனவே மேனாட்டாரின் வியாபாரச் சுரண்டலினால் வறுமையுற்றிருக்கும் கீழைத்தேசங்களில், அளவுக்கு மிஞ்சிய மக்கட் பேற்றினால், சனத்தொகை அதிகரித்துப் பல சிக்கல்களைக் கிளப்பி வருவது யாவருமறிந்த விஷயமே. இரண்டு மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்த ஆயிரக்கணக்கான தம்பதிகள் நமது நாட்டில், அத்துடன் நில்லாது, மேன்மேலும் சந்ததி பெருகுவதைத் தடுக்க விரும்பியும் வகையறியாது தவிக்கின்றனரென்பது மறுக்க முடியாத உண்மையாகும். அப்படிப்பட்டவர்களுக்குத் தமிழிலும், மேனாட்டு விஞ்ஞான முறைகளிலும்தேர்ச்சிபெற்ற திரு. பொ. திருகூடசுந்தரனாரியற்றிய இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். இதில் கர்ப்பத்தடைக்குரிய இயற்கைமுறைகளையும் செயற்கைமுறைகளையும், யுவர்களும், நடுவயதுள்ளவர்களும் எளிதில் விளங்கிக்கொள்ளும் தெள்ளிய தமிழ் நடையில், மேனாட்டு நவீன ஆராய்ச்சி முறைக்கேற்ப விவரித்திருக்கிறார். இங்கிலாந்து, அமெரிக்கா தேசங்களில் ஸ்ரீமதி மார்கரட் சாங்கர், டொக்டர் மேரி ஸ்டோப்ஸ் அம்மையார் முதலியவர்கள் பொது மக்களுக்குத் தங்கள் நூல்களின் மூலம் செய்திருக்கும் சேவைகளைப்போன்று, 'விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை' என்ற இந்த நூலின்வாயிலாக திரு. பொ. திருகூடசுந்தரனார் நம் தமிழ் மக்களுக்குக் "காலத்தினாற் செய்த" "மாணப்பெரிய" உதவியைப் புரிந்திருக்கின்றார். தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி பாஷைகளிலும் இப்புத்தகம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது பொருத்தமேயாகும். ஆங்கிலத்திலும் ஒரு மொழிபெயர்ப்பு வரவேற்கத் தக்கது. புத்தகம் நல்லமுறையில் அச்சிடப்பெற்று; நியாயமான விலைக்கு வழங்கப்படுகிறது.

**ஜவஹர் கதை**: ஆசிரியர்: திரு. பொ. திருகூடசுந்தரம், எம். ஏ, பி. எல். பிரசுரம்: காந்தி நிலையம், தியாகராயநகர், சென்னை; உயரிய பதிப்பு. விலை ரூபா 1-0-0. மலிவுப் பதிப்பு. விலை ரூபா 0-8-0.

இச்சிறுபுத்தகம் "மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது' என்பதற்கொப்ப, பள்ளிக்கூடங்களில் பெரிதும் விரும்பி 6 முதல் 8-ம் வகுப்புகளுக்குப் பாடமாக வைக்கத் தகுந்த நூல். சென்னை அரசாங்கத்தாரால் பரிசளிக்கப்பெற்றது. ஆங்கிலத்தில் நேருஜி எழுதியுள்ள சுயசரிதையைப் படித்தவர்கள்கூட இந்தியப் பிரதமரின் சரிதையை இத் தமிழ்ப்புத்தகத்தைப்படித்து இன்புறலாம். இந்நூலுக்கு இருக்கும் மதிப்பை 5-ம்பதிப்பும் செலவாகி 6-ம் பதிப்பு இவ்வருஷம் வெளிவந்தமையால் நன்கு அறியலாம். கவர்ச்சிகரமான முறையில் ஜானகியென்ற சிறுமிக்கும் மாமாவுக்கும் நடக்கும் சம்பாஷணைமுறையிற் சரித்திரம் அமைந்திருக்கிறது. வசனநடையில், இது குழந்தைகளுக்கெழுதப் பட்டதென்பதை ஆசிரியர் ஞாபகம் வைத்துக்கொண்டே எழுதியிருக்கிறார். சரித்திர சம்பந்தமான வியாசங்களெழுத மாணவர்கள் இம் மாதிரி நடையைப் பின்பற்றலாம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்துப் புத்தகசாலையிலும் பொதுஜன வாசிகசாலைகளிலும் அவசியம் இருக்க வேண்டிய நூல்கள் இப்படிப்பட்டவை. முதற்பதிப்பு 1948-ல் வெளிவந்தபடியால் கடந்த மூன்று ஆண்டுகளில் நடந்திருக்கும் மிக முக்கியமான சம்பவங்களில் ஸ்ரீ ஜவஹர் அவர்கள் பங்குபற்றியிருப்பதையும் அடுத்த பதிப்பிலாவது சேர்த்துக் கொள்ளுதல் விரும்பத் தக்கது.

▼

**தேவாரப்பண்முறைக்கட்டளை விளக்கம்**: தொகுத்தவர்: அ. நடேசதேசிகர், காரைக்குடி; பிரசுரம்: செட்டிநாடு அச்சகம், தேவகோட்டை; விலை குறிக்கப் படவில்லை.

திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியினுதவியால் அபயகுலசேகர சோழ வேந்தர் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானது திருக்கோயிலிற் தேடியெடுத்து, அரிதிற் கிடைத்த பெறற்கரிய பெருஞ் செல்வமாகிய அத் தேவாரப் பதிகங்களைத் திருமுறைகளாகவும் கட்டளைகளாகவும் வகுத்து, திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனர் மரபிலே வந்த இசைச் செல்வியினுதவியால் அப் பதிகங்களுக்குப் பண்ணமைப்பித்தும் சைவத் தமிழுலகிற்குப் பேருதவி புரிந்தாரெனத் தேவாரத்தின் வரலாறு அறியக்கிடக்கின்றது. மூவரியற்றிய பதிகங்கள் மொத்தம் ஒரு லக்ஷத்து ஈராயிரத்தில் செல்லரியாத ஏடுகளிலுள்ளவை 795 மட்டிற்றான் அக்காலத்திற்கிடைத்தன. நம்பியாண்டார் காலத்தில் வகுக்கப்பட்ட பண்முறைப்படியே பதிகங்களை யோதி இறைவன் றிருவருளைப் பெற முயல்வது சாலச் சிறந்ததென யாவரும் ஒப்புக்கொள்வர். அம்முறையை அறிந்து, ஸ்ரீ உமாபதி சிவம் திருமுறைகண்ட புராணச் செய்யுட்களிற் கூறியவாங்கு பண்ணமைத்துப் பாராயணம் செய்யக் "கட்டளை விளக்க"மென்னு மிந் நூல் தக்க வழிகாட்டியாயிருக்கும். "நந்தாத நேரிசையாங் கொல்லிக்கு" என்ற வாக்கியத்திலிருந்து, கொல்லி, நேரிசை என்று இரண்டாக வையாமல் கொல்லி என்று ஒரே பண்ணாக வைத்துக்கொண்டால் போதுமென்று தோன்றுகிறது. அப்படியானால் மொத்தப் பண்களின்தொகை 23 ஆகும். மேலும் "காந்தாரமாகிய பியந்தையாங் கட்டளைக்கு" என்ற வாக்கியத்தாற் காந்தாரம் வேறு பியந்தை வேறென்று இரு பண்களாக வையாமல் காந்தாரமென்ற ஒரே பண்ணைத் தேசிகர் எடுத்துக்கொண்டிருப்பதையுங் காண்க. (18-ம் பக்கம் பத்தாவது பண்). நன் முயற்சியால் சைவத் தமிழிற்கு நல்லுதவியளித்த ஸ்ரீ தேசிகர் விரும்பும் ஏனையவசதிகளும் விரைவிற் கிடைக்குமென நம்புகிறோம்.

—ஸி. எஸ். ஜி.

●

**கீர்த்தனை மஞ்சரி**: ஆசிரியர்: பெ. தூரன்; பிரசுரம்: தமிழிசைச் சங்கம், செம்புதாஸ்வீதி, சென்னை; விலை ரூபா 3-0-0.

தமிழிசை வளர்ச்சியில் ஆர்வமுள்ள கலைஞர்களுக்குக் கீர்த்தனை மஞ்சரி ஓர் அரும்பெரும் பொக்கிஷமாகும். இதை இயற்றியவர் தமிழ் நாட்டின் இசைக் கவிஞருள் ஒருவராகிய திரு. பெரியசாமித்தூரனவர்கள். இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களும், சங்கீதவித்துவான் திரு. என். சிவராமகிருஷ்ணன் அவர்களும் இதிலுள்ள கீர்த்தனைகளுக்கு இசை வகுத்தும் சுர தாளங்கள் அமைத்தும் உதவியிருக்கின்றனர். இதிலுள்ள பாடல்கள் அனைத்தும் இப்போது பெரிய வித்துவான்களாற் கையாளப்பட்டு வருகின்றன. கீர்த்தனை, பதம், தில்லானு, ஜாவளி முதலியன இதில் அமைந்துள்ளன.

திரு. தூரன் அவர்கள் இத்துறையிற் போதிய அனுபவமும் ஆற்றலும் மிகுந்தவர்கள்.

கல்கி ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமது அருமையான முன்னுரையிற் குறிப்பிட்டிருப்பதாவது: "ஸ்ரீ தூரனின் சாஹித்யங்களில் உயர்தர சங்கீதத்துக்குரிய சிறந்த பண்புகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. சாஹித்யங்களில் அவர் கையாளும் தமிழ் எளிதாயும் இனிதாயும் இருக்கிறது; உணர்ச்சி ததும்பிக் கவிதா சந்தம் பொருந்தியிருக்கிறது. நமது முன்னோர்கள் கையாண்டு பண்பட்ட பாணியில் ஸ்ரீ தூரன் சாஹித்யங்களை அமைக்கிறார்."

நமது வாசிகசாலையில் விமர்சனத்துக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.

●

1. **கடல் முத்து**: ஆசிரியர்: எஸ். ஆறுமுகம்; விலை ரூபா 1-0-0.
2. **நினைவுச்சின்னம்**: ஆசிரியர்: இளமைப்பித்தன்; விலை ரூபா 1-0-0.
3. **உலக அரங்கில்**: ஆசிரியர்: டி. கே. சீனிவாசன். விலை ரூபா 1-0-0.
4. **தபாலாபீஸ் விநோதங்கள்**: ஆசிரியா: க. சண்முகசுந்தரம் சப் போஸ்ற்மாஸ்றர்) விலை அணு 8.

இந்நான்கு நூல்களையும் வெளியிட்டோர்: பொன்னி லிமிட்டெட், 16 சேணிஅம்மன் கோயில் தெரு, தண்டையார்ப்பேட்டை, சென்னை 21.

கடல் முத்து என்பது ஒரு கதைத் தொகுதி. இதில் பத்துக் கதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் சாதாரண மக்களின் அன்ருட வாழ்க்கையை வைத்துக்கொண்டு எழுதப்பட்டவை. வசனநடையும் எடுத்துக்கொண்ட பொருளுக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்றதாக அமைந்திருக்கிறது.


நினைவுச் சின்னம் என்பது ஒரு கதைத் தொகுதிதான். பல பல உணர்ச்சிகளையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டவை. இதில் உள்ள பத்துக் கதைகளும் பொழுதுபோக்குக்கு மிக அருமையானவையாக இருப்பதுமட்டு

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

எங்களுடைய கங்காணி எங்களை கைவிட்டுக் கொண்டிருந்தான்— ஆனல் நாங்கள் இப்பொழுது அவனைப்பற்றி பெருமிதமடைகிறோம்!




சிலவாரங்களுக்குப் பிறகு:




Copyright : Horlicks Ltd.

ஹார்லிக்ஸ் எவ்வாறு உங்களை போஷணைக் குறைவிலிருந்து பாதுகாக்கும்

நீங்கள் உட்கொள்ளும் உணவில் தேகாரோக்கியத்திற்கும் வலிமைக்கும் அவசியமான சில போஷணைச் சத்துக்கள் அடங்கியிராமல் இருக்கலாம். நீங்கள் எவ்வளவு உணவு சாப்பிடுகிறீர்கள் என்பதைவிட எவ்விதமான உணவு சாப்பிடுகிறீர்கள் என்பதே முக்கியம். நீங்கள் முழு உணவு சாப்பிட்டும் போஷணைக் குன்றியிருக்கலாம். உங்களுடைய தினசரி உணவுடன் 100க்கு 100 போஷணையுள்ள ஹார்லிக்ஸை சேர்த்துக் கொள்ளுங்கள். ஹார்லிக்ஸ் முழு ஆடை நிரம்பிய சுத்தமான பசும்பாலோடு, போஷாக்குச் சத்து மிகுந்த கோதுமை, பக்குவப் படுத்தப்பட்ட பார்லி முதலியவை சேர்த்து தயாரிக்கப் படுகிறது.




½ ராத்தல், 1 ராத்தல், 5 ராத்தல் பாட்டில்களில் கிடைக்கும்

ஹார்லிக்ஸ்
கூடுதல் போஷணைக்கு




நீங்கள் ஹார்லிக்ஸ் வில்லைகளை சாப்பிட்டுப் பார்த்திருக்கிறீர்களா? அவை மிகவும் ருசியானவை.

HLC. 209




**அருமையான மருமக்களே!**

மழையில்லாது போனல் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ முடியாது. திருவள்ளுவர்கூடத் தமது உலக நூலாகிய திருக்குறளில் மழையின் சிறப்பைப்பற்றி அழகாகக் குறள் வெண்பாக்களிற் பாடியிருக்கின்றார்.

மண்டூரிலுள்ள மருகி ஜெயமணி மழைபெய்த அதிசயத்தைப்பற்றி எழுதியிருப்பதைப் படித்து மகிழவும்.

கேசரிமாமா

## மழை பெய்தது!

**மே.489 ந. உ. ஜெயமணி**

மழை பெய்யுங் காலங்களெல்லாம் ஓடி மறைந்துவிட்டன. பயிர்பச்சையெல்லாம் வாடி வதங்கிவிட்டன. ஏரி குளம் முதலியவற்றில் நீர் வற்றிவிட்டது. வருடத்தில் ஒரு முறையாவது மழை பெய்யாவிட்டால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இருந்தது. நீர் ஊற்றுக்களிலும் கிணறுகளிலும் நீர் இல்லை. பூமி புல் பூண்டுகளெல்லாம் அழிந்து வெறும் தரவையாகக் காட்சி தந்தது. அங்கங்கே காணப்படும் ஆழமான ஓரிரண்டு கிணறுகளில் மட்டும் சிறிது நீர் இருந்தது. அவற்றால் மக்கள் கொஞ்சம் ஆறுதலடைந்தார்கள். என்றாலும் மழை இன்மையால் மக்கள் மனம் துயருற்றது.

ஒரு நாளா! இரு நாளா! ஆறு மாதங்களாகிவிட்டன. மழை பெய்ய வேண்டுமெனச் சனங்கள் நாள் முழுதும் கடவுள் வழிபாட்டிலேயே ஈடுபட்டிருந்தனர். எங்கே விசேடமான கோயில்கள் உண்டோ அங்கெல்லாம் சென்று காணிக்கை செலுத்தி நேர்த்திக்கடன்களும் செய்தார்கள். உண்ண உணவில்லை. குடிக்க நீர் இல்லை. இப்படியான கஷ்டங்களினூடேயும் தங்களை ஒறுத்துக் காணிக்கைகளைச் செலுத்தினார்கள். அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகக் கோவிலின் உள்ளே பழிகிடந்தார்கள். இன்னும் இரண்டு மாதங்கள் ஓடி மறைந்தன.

அன்று ஒரு நாள் மேகங்களெல்லாம் மிக விரைவாய் ஓடின. மின்னல் கண்பார்வையைத் தாக்க; முழக்கம் காதைத் துளைத்தது. என்ன கடவுளுக்குக் கண் இல்லை என்று எண்ணிய கொண்டைர்கள் என்று மக்கள் கடவுளை வாழ்த்தும் சத்தம் வானைப் பிளந்தது. இச் சத்தத்தோடு மழையும் சோ! எனப் பொழிந்தது. சிறு துள்ளி பெரு வெள்ளமாய் எல்லா நீர் ஊற்றுக்களும் நிரம்பிவிட்டன. ஆறுகளிலெல்லாம் மீன்கள் மின்வெட்டுக்கள் போலத் துள்ளின. ஆமை தவளை இவைகளின் ஓசையும், பாடும் ஊரிகளின் இன்னொலியும் என் சிந்தனைசக்தியை ஓட்டிச் செல்வது போல் இருந்தது. அன்று அழுதவர்களெல்லாம் இன்று சிரித்தார்கள். அன்று இரவு எல்லாரும் மழை பெய்த அதிசயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டேயிருந்தார்கள். ஒருவராகிலும் தூங்கவில்லை. காரணம் வேறொன்றும் இல்லை. மழை பெய்த சந்தோஷம்தான்.

## புதிய மருமக்கள்

**மே.567. அ. இராசநாயகம்** சிறில், விடத்தல்தீவு.

**மே.568. சி. நடராசா**, விக்கினேஸ்வர வித்தியாலயம், காவெட்டி.

**மே.569. வே. யோ. நாதன்**, மறன் குளம் சந்தி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

### பிறந்த தின வாழ்த்துக்கள்

**23-9-51 — 30-9-51**

மே. 54 சி. இராசரத்தினம்; கி. 314 ம. வில்விமலர்; மே. 379 அ. குணபாலன்; மே. 387 ச. சோமசுந்தரம்; கி. 390 ந. குணதீசன்; மே. 492 க. இராஜேஸ்வரி; மே. 497 கே. சாமித்தம்பி; மே. 569 வே. யோ. நாதன்.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக!


* காங்கேசன் துறையில் *
'ஷெல்' பெற்ரோல் நிலையம்
தினம் 24 மணி நேரமும் திறந்துள்ளது

விநியோகிப்பவர்கள் :
நியூ கோ ட்ரேடிங் கம்பெனி
காங்கேசன் துறை

தந்தி விலாசம்: "நியூ கோ" டெலிபோன்: நம்பர் 25

(4367)






துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 172-X54 TM


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 5367 தருமசாதனம்**

மாவிட்டபுரம், 1. கந்தையா வயித்திலிங்கம்; யாழ்ப்பாணம், 2. சி. பொன்னம்பலம் (அப்புக்காத்து; யாழ்ப்பாணம் 3. பீ. சே. சோமசுந்தரம் (பிரக்கிராசியார்).

வழக்காளிகள்

வண்ணார்பண்ணை மேற்கு, 1. சுப்பிரமணியம் திருச்சிற்றம்பலம்; தெல்லிப்பழை கிழக்கு, 2. குழந்தைவேலு உருத்திராபதி; மாவிட்டபுரம், 3. சின்னத்தம்பி கந்தவனம்; 4. பெண் இளையபிள்ளை; மாவிட்டபுரம், 5. கந்தையா கைம்பெண் முத்துப்பிள்ளை; காங்கேசன் துறை, 6. அருணசலம் பரமசாமி; கொழும்பு, சி. ஜி. ஆர்., 7. பரமசாமி செல்லையா; கீரிமலை, 8. நாகமுத்து சிதம்பரப்பிள்ளை; 9. பெண் சின்னத்தங்கம்; அளவெட்டி, 10. சிவசம்பு தம்பு; 11. பெண் செல்லமுத்து; கீரிமலை, 12. தம்பையா செல்லையா; அளவெட்டி, 13. செல்லையா பஞ்சாட்சரம்; காங்கேசன் துறை, 14. கந்தையா வேலாயுதம்; காங்கேசன் துறை, 15. பெண் தங்கம்மா; மாவிட்டபுரம், 16. பொன்னு கந்தையா; மாவிட்டபுரம், 17. [illegible] கேசன் துறை, 18. [illegible] ஐயாத்துரை.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் 5367-ம் இலக்கத் தருமசாதன திரு. நாகலிங்கேஸ்வர மடாலய வழக்கில், எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகள் 1951-ம் ஆண்டு ஒக்டோபர் (ஐப்பசி) மாதம் 13-ந் திகதி (13-10-51) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் பச்சிலைப்பளி—கரைச்சிப்பகுதி, இரணைமடுக்குறிச்சி "பாலைக்காடு" P. 4242-ம் படத்தில் லொட் 1848-க்கு ஏக்கர் 19-ம் றூட் 3-ம் பேச்செஸ் 23-ம். எல்லை: வடக்கு, றோட்டுக்கு விடப்பட்ட காணி. தெற்கு, P. 4242-ல் லொட் 1861. கிழக்கு, P. 4242-ல் லொட் 1847. மேற்கு, P. 4242-ல் லொட் 1848. இதடங்கலும்.

2. மேற்படி இறை "பாலைக்காடு" P. 4242-ம் படத்தில் லொட் 1847-க்கு ஏக்கர் 11-ம் றூட் 2-ம் பேச்செஸ் 34-ம். எல்லை: வடக்கு, றோட்டுக்கு விடப்பட்ட காணி. தெற்கு, P. 4242-ல் லொட் 1862. கிழக்கு, கனகராயன் ஆறு. மேற்கு, P. 4242-ல் லொட் 1848. இதடங்கலும்.

3. மேற்படி இறை "மகிலன் காடு" P. 4242-ல் லொட் 1861-க்கு ஏக்கர் 19-ம் றூட் 2-ம் பேச்செஸ் 1-ம். எல்லை: வடக்கு, P. 4242-ல் லொட் 1848. தெற்கு றோட்டுக்கு விடப்பட்ட காணி. கிழக்கு, P.4 242-ல் லொட் 1862. மேற்கு, P. P. A. 1018-ல் லொட் 1. இதடங்கலும்.

4. மேற்படி இறை "மகிலன் காடு" P. 4242-ல் லொட் 1862-க்கு ஏக்கர் 7-ம் பேச்செஸ் 10-ம். எல்லை: வடக்கு, P. 4242-ல் லொட் 1847. தெற்கு, றோட்டுக்கு விடப்பட்ட காணி. கிழக்கு, கனகராயன் ஆறு. மேற்கு, P. 4242-ல் லொட் 1861. இதடங்கலும்.

றோட்டுக்கு விடப்பட்ட காணி

| | | |
|---|---|---|
| பாலைக்காடு Lot. 1848 A. R. P. 19-3-23 | பாலைக்காடு Lot 1847 A. R. P. 11-2-34 | கனகராயன் ஆறு |
| மகிலன் காடு Lot. 1861 A. R. P. 19-2-1 | மகிலன் காடு Lot. 1862 A. R. P. 7-0-10 | |

றோட்டுக்கு விடப்பட்ட காணி

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer.
தெல்லிப்பழை 15-9-51 [4404]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T'Phone No. 805

# The EeLAKESARI

NATIONALIST TAMIL WEEKLY

Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union

Founder: N. PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, Sept., 23, 1951 | No. 12

## நமது வாசிகசாலை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மல்லாமல், சிந்தனையின் அமைதியைக் குலைத்து விடுவனவாகவும் உள்ளன.

உலக அரங்கில் என்ற கதைத்தொகுப்பில் பாவமும் சாபமும், அந்த ஒரே குரல் முதலிய சிறந்த கதைகள் அடங்கியுள்ளன.

தபாலாபீஸ் விநோதங்கள் ஒரு சப் போஸ்ற்மாஸ்றரால் எழுதப்பட்டவை. அவர் தமது தொழில் அனுபவத்தில் கண்டவைகளை மிக ஹாஸ்யமாகச் சித்திரித்திருக்கிறார். அருமையான முயற்சி.

●

**பூச்சரம்:** ஆசிரியர்: சுகி பிரசுரம்: பழனி பிரசுரம், மணிக்கூண்டு. புதுக்கோட்டை; விலை ரூபா 1-8-0.

ஒன்பது கதை மலர்களால் பின்னப்பட்டது இப் பூச்சரம் ஒவ்வோரு கதையும் வெவ்வேறு வாசனை கொண்டவை. நாட்டுப்புறக் காட்சிகள் கதைகளிற் கர்ச்சிதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. சுவை கனிந்த நடை. இது சுகி அவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட சிறந்த ஒரு கதம்பம்.

●

**பளிங்குச் சிலை - ருஷியக் கதைகள்:** மொழிபெயர்ப்பு: புதுமைப் பித்தன்; பிரசுரம்: ஸ்டார் பிரசுரம், சென்னை 5; விலை: ரூ. 1.

ருஷியக் கதைகள் மூன்றின் மொழிபெயர்ப்பு இதில் அடங்கியுள்ளன, புதுமைப் பித்தனுக்கே உரித்தான தனித் தன்மை வாய்ந்த நடை, கதையின் முடிவுவரை ஈர்த்துச் செல்கிறது. நிலவின் பளிங்குச் சிலையாற் கவரப்பட்டு அதனாற் திருடனான கிழவனின் கதை உருக்கமானது.

'ஏ! படகுக்காரா' என்ற கதை சோகத்தின் சிகரம் என்று தான் சொல்ல வேண்டும். மிக்கிஷாரா என்ற கிழவன் தன் ஏழு குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டித் தன் மூத்த மைந்தர் இருவரையும் கொல்லும் நிகழ்ச்சி இதில்வருகிறது. "மகனே! இந்த முட் கிரீடத்தை எனக்காகச் சுமந்திடு உனக்கு மனைவியும் சிசுவும் உண்டு என்று எனக்குத் தெரியும். வீட்டில் ஏழு அனாதைச் சிசுக்கள் எனக்கு இருக்கின்றன. நான் உன்னை விட்டால் காஸக்குகள் என்னைக் கொன்று போடுவார்கள். அப்போ என் குழந்தைகள் தெருவில் பிச்சை எடுத்து ஏங்கும்', என்னும் இடத்தில் சோகம் உச்ச நிலையடைகிறது. மிக்கிஷாரா எங்கள் அநுதாபத்தைப் பெற்றுவிடுகிறான்.

மூன்றாவது கதையான 'அதிகாலை' ஒரு ஹாஸ்யக் கதை. குருட்டிகாவின் அசட்டுத்தனங்களைக் கண்டு வயிறு குலுங்கச் சிரிக்கிறோம்.

மொழிபெயர்ப்பு விறுவிறுப்பாயிருக்கிறது. அச்சுப் பிழைகள் காணப்படுகின்றன. மொத்தத்திற் 'பளிங்குச் சிலை' படித்தின்புறவேண்டிய ஒரு புத்தகம்.

—கே. எஸ்.

●

**கணிதப் பயிற்சி மாலை - ஐந்தாம் வகுப்பு:** ஆக்கியோன்: க. சண்முகம்; பிரசுரம்: கொம்மேர்ஷல் பிறெஸ் அன்ட் ஸ்ரோர்ஸ், பெரிய தெரு, யாழ்ப்பாணம்; விலை: சதம் 80.

ஐந்தாம்வகுப்புப் பகிரங்க பரீட்சைக்குரிய எண்பாடத்திற் குகந்த பயிற்சி மாலையாக இது வெளியிடப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் பிள்ளைகளின் தேவையை உணர்ந்து இதனை எழுதியுள்ளார். 'இன்றைய நிலையில் இந்நூல் பெரிதும் வேண்டியதொன்று' எனக் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ச. பேரின்பநாயகன் தமது மதிப்புரையிற் குறிப்பிட்டுள்ளார்.

●

**முழக்கம்:** ஆசிரியர்: "மின்னல்"; விலாசம்: $\frac{13}{1}$ மில்வீதி மட்டக்களப்பு; ஆண்டுச் சந்தா: ரூ. 1-50, தனிப்பிரதி சதம் 15.

'முழக்கம்' என்னும் இப் புதிய மாத வெளியீட்டிற் காரசாரமான கட்டுரைகள் கசப்பான ஒரு சில உண்மைகளுடன் வெளியாகியிருக்கின்றன. உண்மைகளை எடுத்துக் கூறும்போது நிதானத்தை இழந்து விடக்கூடாது. 'முழக்கம் அன்பின் வீறுகொண்டொலிப்பதாமே' என்று யோகி சுத்தானந்தபாரதியார் வாழ்த்தியுள்ளார்கள்.

### பின்வந்த நூல்கள்

**காளி தரிசனம்:** ஆசிரியர்: இ. ஐ. ர.; விலை: ரூபா 1-8.0.

**கலைந்த கனவு:** ஆசிரியர்: 'அநுத்தமா'; விலை: அணா 8.

**தக்காளி:** ஆசிரியர்: ச. கு. கணபதிஐயர் எம். ஏ., விலை: அணா 8.

இம் மூன்று நூல்களையும் பிரசுரித்தோர்: அமுதநிலையம், தேனாம்பேட்டை, சென்னை-18.

## ஐக்கிய தின விழா

### தீவுப்பகுதிச் சபை

புங்குடுதீவு, 10-9-51

இவ்விழா 9-9-51 ஞாயிற்றுக்கிழமை மாலை ஆரம்பமாயிற்று. ஆசிரியர் திரு. அ. சபாபதிப்பிள்ளை தலைமை வகித்தார்.

தலைவர் அவர்கள் பேசும்போது இன்றைய உலகிற் பலவேறு முயற்சிகளுக்கும் ஐக்கிய மார்க்கமே சிறந்த தென்பதைப் பற்றியும், சிறப்பாகத் தீவுப் பகுதியில் ஆரம்பத்தில் ஐக்கிய உணர்ச்சி முன்னணியில் நின்றவிடத்தும் பண்டகசாலைகள், தோணிச் சங்கம் என்பனவற்றின் பெறுபேறுகள் இன்னும் அம்பலத்துக்கு வாராமையே தீவுப் பகுதியைப் பின்னணியில் நிற்கச் செய்கின்ற தென்றுங் கூறி, "போக்கு வரத்துச் சேவை ஐக்கிய சங்கம்" ஒன்று அவசியம் நிறுவப்பட வேண்டுமென வற்புறுத்தினார். அதன் பின்னர் திரு. சி. இ. சதாசிவம்பிள்ளை ஆசிரியர் அவர்கள் "ஐக்கிய இயக்க முன்னணிவேலை" என்னும் பொருள்பற்றியும், திரு. கா. பொன்னையா ஆசிரியர் அவர்கள் "ஐக்கிய இயக்கமும் கிராமக் கைத்தொழிலும்" என்னும்பொருள் பற்றியும், திரு. சு. வில்வரத்தினம் ஆசிரியர் அவர்கள் "போக்கு வரவு சேவை ஐக்கிய சங்கம்" என்னும் விஷயம் பற்றியும், சங்கப் பரிசோதகர் திரு. இ. வேதாரணியம் அவர்கள் "நம் நாடும் ஐக்கிய இயக்கமும்" என்னும் பொருள் பற்றியும் விரிவுரைகள் ஆற்றினர்.

ஈற்றில் திரு. ஆ. சரவணமுத்து ஜே. பி. அவர்களாலும், ஐக்கிய சங்கப் பரிசோதகர் திரு. வி. நடராசா அவர்களாலும் சிறந்த குறிப்புரைகள் கூறப்பட்டன.

## புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை

இவ்வித்தியாசாலையில் பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளிவிழா சமீபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பிரமுகர்கள் பலர் இவ்விழாவிற் பங்குபற்றினர்.

## சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:

இலங்கை-இந்தியா ரூ. 6-00

மலாயா — $ 6-00

தனிப்பிரதி சதம் 10. காசு 10

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. 7185

மாவிட்டபுரம் தற்போது கொழும்பு
தம்பையா தண்டிகை கனகராயர்
வழக்காளி

மாவிட்டபுரம் தற்போது கொழும்பு
1. சரவணமுத்து கனகரத்தினம்

மாவிட்டபுரம்
2. விசுவநாதர் மகள் செல்லம்மா எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7185-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள், 1951-ம் ஆண்டு ஒக்டோபர் (ஐப்பசி) மாதம் 16ந் திகதி (16-10-51) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்த தக்காணிகளுக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை**—முதல் வட்டி ரூபாய் 2570/-ம் இதில் ரூபாய் 1500/-க்கு 16-10-50 திகதி தொடக்கம் 30-4-51 திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 280-67½ சதம்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று, மாவிட்டபுரமிறை "பெரிய சீமா" நிலைப் பரப்பு 9¾-ம் பனைகள் வேம்புகளும், எல்லை: கிழக்கு, கந்தன் கைம்பெண் சிதம்பரத்திற்கும் பங்காளருக்குந் தம்பு கைம்பெண் பொன்னுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு, தம்பு கைம்பெண் பொன்னுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும் பாதை முகப்பும், மேற்கு, சின்னையாபெண் வள்ளிப்பிள்ளையின் ஆதனமும் ஒழுங்கையும், தெற்கு, ஒழுங்கை. இதில் சொரியலாய் மூன்றில் ஒரு பங்கு (⅓) முற்பதிவு H. $\frac{177}{276}$

2. மேற்படி மாவிட்டபுரமிறை 'பெரிய கலட்டி" நிலைப்பரப்பு 31½-ம் கிணறும் வான்பயிர்களும், எல்லை: கிழக்கு, மணியர் சின்னையாவின் ஆதனம், தற்போது ஒழுங்கை. வடக்கு, சின்னப்பொடி ஆறுமுகத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, கந்தவனம் சின்னத்தம்பியின் ஆதனம், தெற்கு, ஒழுங்கையும் அம்பலவாணர் கைம்பெண் பூதாத்தைப்பிள்ளைக்கும் பங்காளருக்கும், கந்தையா பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் பங்காளருக்கும், வயிரவி பெண் சிதம்பரத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். இதற்கூடாகப் போகும் றேட்டுக்கு விடப்பட்ட காணி நீக்கி மிகுதியில் சொரியலாய் நாலில் மூன்று பங்கும் (¾)ம் ஈடுவைத்தவர் வெட்டுவித்த கிணறு நித்தமாகவும்.

முற்பதிவு H. $\frac{32}{123}$.

குறிப்பு:—6-9-51-ல் கோட்டாரின் கட்டளைப்படி மேலே விபரிக்கப்பட்டிருக்கும் 2-ம் ஆதனம் முன் விற்கப்படும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை,
11-9-51 [4406]

## நல்லூர் வடக்கு ஜனசமூக சேவா சங்கம்

இச் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழா சமீபத்தில் மந்திரி சிற்றம்பலம் அவர்களின் தலைமையிற் கொண்டாடப்பட்டது.

## கலைமகள் ஆசிரியர் விஜயம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றியே அவை நகரமண்டபத்துக்கு எழுந்தருளும்.

### வயோதிபர் இல்லம்

வடபகுதி முழுவதுக்கும் பிரயோசனமாகும் முறையிற் கைதடியில் 10 இலட்சம் ரூபாய் செலவில் அரசாங்கம் ஒரு வயோதிபர் இல்லத்தைச் சகல வசதிகளுடனும் அமைக்கத் தீர்மானித்து அதற்கான இடத்தையும் எடுத்துக் கொண்டது. ஆரம்பத்தில் இதில் 250 பேர்வரை தங்கியிருக்கமுடியும்.

### சமசமாஜிகள்

சென்ற 14, 15, 16 திகதிகளில் யாழ்ப்பாணம் நகர மண்டபத்திற் சமசமாஜிகளின் அரசியல் வகுப்புகள் நடைபெற்றன. தோழர்கள் கொல்வின் ஆர். டி சில்வா, என். எம். பெரேரா, சுபசிங்க, உட்பட வேறும் பலர் இவ் வகுப்புக்களை நடாத்தியதுடன் பல இடங்களுக்குச் சென்று விரிவுரைகளும் ஆற்றினர். சமீபத்தில் அச்சுவேலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் டொக்டர் என். எம். பெரேரா அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது: 'ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலில் மண் கவ்வுமென முன்னாள் மந்திரி பண்டாரநாயகா அறிந்துவிட்டபடியாற்றான் அந்தக் கட்சியினின்றும் விலகிக் கொண்டார்.' தோழர் டி. பி. சுபசிங்க கூறியதாவது: 'யாழ்ப்பாணக் கடலேரித் திட்டம் திரு. கே. பாலசிங்கம் அவர்களாலே திட்டமிடப்பட்டது. அதன் ஒருபகுதியை மட்டுமே அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.'

### வவுனியா உபதேர்தல்

தமிழ்க் காங்கிரசின் கூட்டமொன்று வண்ணார்பண்ணையிலுள்ள வழக்கறிஞர் திரு. ஆர். சிவகுருநாதர் அவர்கள் இல்லத்திற் கூடிற்று. மந்திரி ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் தலைமை வகித்தார்கள். வவுனியாவில் நடைபெறவிருக்கும் உபதேர்தலுக்குத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் ஒருவரை அபேட்சகராக நிறுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் டிசெம்பரில் நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணம் நகரசபைப்பொதுத்தேர்தலிற் சகல வட்டாரங்களுக்கும் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்துவ தெனவும்கூட்டத்திலேதீர்மானிக்கப்பட்டது.

### தீவுப்பகுதியில் மழை

ஊர்காவற்றுறையிலும் அயற் கிராமங்களிலும் சென்ற 17-ந் திகதி போதிய மழை பெய்தது. நீண்ட வரட்சிக்குப் பின்னர் பெய்த மழை மக்களுக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுத்துள்ளது. வரட்சிகாரணமாகக் கால்நடைகள் உணவின்றிப் பாதிக்கப்பட்டன. குடிக்கத் தண்ணீர் இன்றி மக்கள் கஷ்டமுற்றனர்.

## பருத்தித்துறையிற் பாரதிவிழா

இவ்விழா 11-9-51 செவ்வாய்க்கிழமை மாலை ஊழியன் வாசிகசாலை சனசமூக மண்டபத்தில்கொண்டாடப்பட்டது, திரு. நா. பாலசுந்தரம் ஆசிரியர் தலைமை தாங்கினர். திருவாளர்கள் மு. வாம்பமூர்த்தி, பி. செல்லையா, கே. நடராஜா, எம். இராமகிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## அராலி சரஸ்வதி மகாசபை

இச் சபையின் வருடாந்தக்கூட்டம் சமீபத்திலே திரு. மு. சின்னத்துரை அவர்கள் தலைமையில் வைவித்தியாசாலை மண்டபத்தில்நடைபெற்றது பின்வருவோர் புதிய உத்தியோகத்தராக நியமனமாயினர்.

தலைவர் திரு. மு. சின்னத்துரை. பதலைவர்கள் க. ஆறுமுகம், வி. நாகலிங்கம், காரியதரிசி மு. சதாசிவம், உபகாரியதரிசி க. தர்மலிங்கம், தனாதிகாரி க. சின்னத்துரை, மமேசர், வே. சிதம்பரப்பிள்ளை, நிர்வாகஸ்தர் வேறும் எண்மர்.

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்**
**ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா கோட்டுவட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[4382]

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா—சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு செப்டம்பர்மீ 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org